விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பன்னிரண்டு

Valampurii

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 மார்கழி 04 வெள்ளிக்கிழமை (19.12.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 365

SATS-TECH ENGINEERS



NEW PACKAGES & RENEWAL
CALL :- 222 5908/222 8812

# வன்னிப் பகுதியில் கடும் மழை
# இடம்பெயர்ந்த மக்கள் தவிப்பு



வெள்ளத்தினூடாகப் பயணிக்கும் மக்கள்

## வீதியை வெள்ளம் மூடியதால் போக்குவரத்து பாதிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் கடந்த மூன்று நாட்களாகப் பெய்துவரும் மழையினால் யுத்தத்தால் இடம்பெயர்ந்த மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். வீதிகள் எங்கும் வெள்ளம் வழிந்தோடுவதால் போக்குவரத்துக்களைத் தவிர்க்குமாறும் அங்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (12ஆம் பக்கம் பார்க்க)

வீதிக்குக் குறுக்காகப் பாயும் வெள்ளம்



## சர்வகட்சிக்குழுவின் செயற்பாடுகள் 100-வது அமர்வுடன் நிறைவு பெறும்?

(கொழும்பு)

இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு இந்த வருடத்துடன் தனது அமர்வுகளை முடித்துக் கொள்ளவிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

எதிர்வரும் 29ஆம் திகதி சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் 100-வது அமர்வு நடைபெறவிருப்பதுடன் இதன் பின்னர் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பான இறுதி யோசனைத் திட்டத்தை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் கையளிக்கவிருப்பதாகக் கூறப்படுகிறது.

இலங்கையில் 3 தசாப்தத்துக்கு மேலாகத் தொடாந்து (12ஆம் பக்கம் பார்க்க)

## பெற்றோலின் விலையில் மாற்றம் எதுவும் இல்லை

(கொழும்பு)

பெற்றோல் விலையில் மாற்றம் இன்றி தொடர்ந்தும் பழைய விலையிலேயே விற்பனை செய்யப்படும் என அரசாங்க தகவல் திணைக்களம் நேற்று இரவு தெரிவித்துள்ளது.

பெற்றோல் விலையை குறைப்பது தொடர்பிலான நேற்று முன்தின உயர்நீதிமன்ற தீர்ப்பு தொடர்பிலான ஆவணப்பிரதி நேற்று அமைச்சரவைக்கு கிடைக்காததன் காரணமாகவே இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பெற்றோல் விலை தொடர்பில் உயர் நீதிமன்றம் வழங்கிய (12ஆம் பக்கம் பார்க்க)

# திருமுறிகண்டியிலிருந்து முன்னேறும் படையினரின் முயற்சி முறியடிப்பு

## 12 சடலங்கள் மீட்பு; புலிகள் அறிவிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சியை நோக்கி முன்னேற முயற்சிக்கும் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் புறநகர்ப் பகுதிகளில் நேற்றும் மோதல்கள் இடம்பெற்றுள்ளன.

நேற்று திருமுறிகண்டிப் பகுதியிலிருந்து கிளிநொச்சியை நோக்கி படையினர் முன்னேற முயற்சித்ததையடுத்து புலிகள் கடும் எதிர்த்தாக்குதலை நடத்தியுள்ளனர்.

இந்த மோதலில் 12 படையினரின் சடலங்கள் மற்றும் ஆயுதங்களை மீட்டதுடன் முன்னகர்வு முயற்சியும் முறியடிக்கப்பட்டதாகவும் புலிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை (02ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்தினரின் 25 சடலங்கள் கையளிப்பு

(கிளிநொச்சி)

வன்னி மற்றும் கிளாலி களமுனைகளில் இடம்பெற்ற உக்கிர சண்டைகளின்போது தம்மால் கைப்பற்றப்பட்ட இராணுவத்தினரின் 25 சடலங்கள் நேற்று சர்வதேச செஞ்சிலுவைக் குழுவின் ஊடாக இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக விடுதலைப் புலிகள் தெரிவித்திருக்கின்றார்கள்.

இதேவேளை(12ஆம் பக்கம் பார்க்க)

## புதிய சட்டமா அதிபராக மொஹான் பீரிஸ் நியமனம்

(கொழும்பு)

புதிய சட்டமா அதிபராக ஜனாதிபதியின் ஆலோசகர் மொஹான் பீரிஸ் நியமிக் கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி மாளிகையில் நேற்றுக் காலை இடம்பெற்ற வைபவத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னிலையில் அவர் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

இவ் வைபவத்(12ஆம் பக்கம் பார்க்க)

# நிறைவேற்று அதிகாரமா? நீதித்துறையா? அமைச்சரவைக் கூட்டத்தில் காரசாரம்!



மகிந்த

(கொழும்பு)

பெற்றோல் விலையைக் குறைப்பது தொடர்பாக நீதிமன்றம் வழங்கியிருக்கும் தீர்ப்பு பற்றி நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு கூடிய அமைச்சரவைக் கூட்டத்தில் கடுமையாக விமர்சிக்கப்பட்டுள்ளது.

பெற்றோலின் விலையை 100 ரூபாயாகக் குறைக்குமாறு நீதிமன்றம் வழங்கியிருக்கும் தீர்ப்பை மீறினால் அனைவரும் சிறைச்சாலைக்கு செல்லத் தயாராக இருக்க வேண்டுமென ஜனாதிபதி, அமைச்சரவையிடம் கூறியதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அரசாங்கத்தைத் தோற்கடிப்பதற்கு வெளிநாட்டு உதவியுடன்(02ஆம் பக்கம் பார்க்க)



... சில்வா

விடுதலைப் பெருவிழா

காலம்: 19,20,21-ம் திகதிகளில்
நேரம்: 19ஆம் திகதி 2.00 மணிக்கு ஒளி விழாவும்
20-ம் 21-ம் திகதிகளில் 3.00 மணிக்கும்
இடம் : இலங்கை நாற்சதுர. சுவிசேஷ சபை
பருத்தித்துறை வீதி, முத்திரைச் சந்தி, நல்லூர்.

கவலை, கண்ணீர், தீராத வியாதி, பிசாசின்பிடி,
பில்லி சூனியக்கட்டு, பரம்பரை சாபங்கள்
ஆகியவற்றிலிருந்து

இலவசம்

இயேசு விடுதலை கொடுக்கிறார்

வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே நீங்கள் எல்லோரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். (மத்.11:28)

19-ம் திகதி (வெள்ளி) பல கலை நிகழ்ச்சிகள் உள்ளடங்கிய ஒளி விழா நிகழ்வுகள் நடைபெறும்.

கொழும்பு மற்றும் இந்தியா பிரதேசங்களில் நடைபெற்ற சுவிசேஷ கூட்டங்களில் அனேக மக்கள் அற்புத விடுதலை அடைந்தார்கள். (2011)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

### 'டிசம்பர் 16 கறுப்பு செவ்வாய்'

# கிரேக்க போர்த் தெய்வத்தின் தினத்தில் இலங்கைப் படையினருக்கு பலத்தசேதம்

## 'ட்ரான்ஸ்கரண்ட்' தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கைப் படையினர் வடக்கில் கடந்த செவ்வாய்க்கிழமை 16ஆம் திகதியன்று ஒரே நாளில் பாரிய இழப்புகளை சந்தித்துள்ளமையை கொண்டு அன்றைய தினத்தை கறுப்பு செவ்வாய்க்கிழமையாக கொள்ளமுடியும் என ட்ரான்ஸ்கரண்ட் இணையத்தளம் தெரிவித்துள்ளது.

கடந்த செவ்வாய்கிழமை மாத்திரம் வடக்கின் யாழ்ப்பாணத்திலும் வன்னியிலும் படையினர் பாரிய சேதங்களை எதிர்நோக்கினர். அன்றைய தினம் படைத்தரப்பின் சேதம் 650 என தெரிவிக்கப்பட்டுள்ளது.

செவ்வாய்க்கிழமை என்பது கிரேக்கத்தின் போர் கடவுளுக்குரிய தினமாகும். இந்த தினத்தில் படைத்தரப்பில் 170 பேர் வரை கொல்லப்பட்டதுடன் 480 பேர் வரை காயமடைந்துள்ளனர். இதில் 300 பேர் சிறிய காயங்களுக்கே உள்ளாகியிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

எனினும் உத்தியோக பூர்வ தகவல்களின்படி இந்த இழப்புகள் குறைத்தே காட்டப்பட்டுள்ளன. படைத்தரப்பின் தகவல்படி குறித்த மோதல்களில் 120 தமிழீழ விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் தரப்பில் 45 முதல் 50 வரையான போராளிகள் உயிரிழந்துள்ளனர். எனினும் காயமடைந் தவர்களின் தொகை தெரியவரவில்லை என ட்ரான்ஸ்கரண்ட் குறிப்பிட்டுள்ளது.

கடந்த 16ஆம் திகதியன்று படையினர் யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் நிலைகளின் மீது தாக்குதல்களை ஆரம்பித்தனர். 53ஆவது படையணி கிளாலி, எழுதுமட்டுவாள் வெளிசெல்லும் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் இரண்டாவது முன்னரங்க நிலைகளின் மீது தாக்குதல்களை நடத்தியது.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் தமிழீழ விடுதலைப் புலிகளின் முதலாவது முன்னரங்க நிலைகளை படையினர் அழித்திருந்தனர். இந்நிலையில் இரண்டாவது நிலைகளை நோக்கி நடத்திய தாக்குதல் வெற்றியளிக்காமல் படையினர் மீண்டும் தமது பழைய நிலைகளுக்கு திரும்பவேண்டியேற்பட்டது. இதன் போது படையினர் தரப்பில் 40 பேர் பலியாகினர். 160 பேர் காயமடைந்தனர். தமிழீழ விடுதலைப் புலிகள் தரப்பிலும் 25 பேர் வரை உயிரிழந்தனர்.

அதேநேரம் 57ஆம் மற்றும் 58ஆம் பிரிவுப் படையினர் வன்னியின் குஞ்சுப்பரந்தன் பகுதியில் இருந்து ஏ 9 பாதையை நோக்கி தமது படைநகர்வை ஆரம்பித்தனர். இதன் இரண்டாவது நகர்வு புளியங்குளத்தில் இருந்து கிளிநொச்சியை நோக்கி மேற்கொள்ளப்பட்டது.

மூன்றாவது நகர்வு மலையாளபுரத்தில் இருந்து கிளிநொச்சிக்கு நடத்தப்பட்டது. நான்காவது நகர்வு திருமுறிகண்டியில் இருந்து ஏ 9 பாதையின் ஊடாக இரணைமடு வுக்கு மேற்கொள்ளப்பட்டுது.

எனினும் இந்த நகர்வுகளின் போது படையினர் பலத்த எதிர்ப்புக்களைச் சந்தித்தனர். கிளிநொச்சியையும் பரந்தனையும் உள்ளடக்கிய நிலையில் 18 கிலோ மீற்றர் தூரத்திற்கு தமிழீழ விடுதலைப்புலிகள் மண்மேடுகளை அமைத்துள்ளார்கள். அத்துடன் குஞ்சுப்பரந்தனில் இருந்து ஆங்கிலத்தின் எல் எழுத்து வடிவிலான மண்மேடுகளை அவர்கள் பரந்தனின் மேற்குப்பகுதி, இரணைமடு மற்றும் கிளி நொச்சியின் தெற்கு பகுதிகளை நோக்கி அமைத்துள்ளனர்.

இந்நிலையில் இழப்புக்களுக்கு மத்தியில் படையினர் அடம்பனில் 5 கிலோமீற்றர் மண் மேட்டு பகுதியை கைபற்றியுள்ள தாக படைத் தரப்பை கோடிட்டு ட்ரான்ஸ் கரண்ட் தெரிவித்துள்ளது. எனவே கறுப்புசெவ்வாய் 650 படையினரின் சேதத்துடன் முடிபடைந்துள்ளதாக அந்த இணையத் தளம் குறிப்பிட்டுள்ளது.

(ச-5)

## இலங்கை நிர்வாக சேவை போட்டிப்பரீட்சை

### 21ஆம் திகதி கொழும்பில்

(யாழ்ப்பாணம்)

இலங்கை நிர்வாக சேவையின் திறந்த போட்டிப் பரீட்சை 2008 கொழும்பில் எதிர் வரும் 21ஆம் திகதி நடைபெறவுள்ளது.

நேர்முகப்பரீட்சையும், எழுத்துப்பரீட்சையும் நடைபெறவுள்ளதால் பிரயாண ஏற்பாடுகள் தொடர்பாக கலந்துரையாட பின்வருவோரை மாவட்ட செயலகத்திற்கு சமுகமளிக்குமாறு அரசாங்க அதிபர் க.கணேஷ் கேட்டுக்கொண்டுள்ளார்.

அழைக்கப்பட்டோரின் விபரம் வருமாறு; ஆர்.பிரசாந்தன் (வட்டு கிழக்கு, வட்டுக்கோட்டை), எஸ்.பிரணவன் (விளையாட்டு மைதான வீதி, கல்வியங்காடு), எஸ்.சுதர்சன் (பாடசாலை அண்மித்ததாக இடைக்காடு, அச்சுவேலி), எஸ்.கஜன் (ஆலங்குழா, சண்டிலிப்பாய்), திருமதி ரி.உமா (மாயக்கைப்பிள்ளையார் கோவிலடி தம்பசிட்டி, பருத்தித்துறை).

(ச-3)

## பறவைக்காய்ச்சல் அபாயம் சுகாதார அமைப்பு எச்சரிக்கை

(கொழும்பு)

பறவைக் காய்ச்சல் பல உலக நாடுகளில் தீவிரமாக பரவி வருவதுடன் இலங்கையிலும் பரவும் அபாயம் நிலவுவதாக உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

எனினும் இலங்கையில் பறவைக்காய்ச்சலால் பீடிக்கப்பட்ட எவரும் இது வரை இனம் காணப் படவில்லை என்றும் பறவைக் காய்ச்சல் பரவாமல் தடுப்புவதற்கு பலதரப்பட்ட நடவடிக்கைகள் எடுத்துள்ளதாகவும் தொற்று நோய் தடுப்பு நிபுணர் டாக்டர் பபா பலிஹவடன தெரிவித்தார்.

இந்தியா, தாய்லாந்து, இந்தோநேசியா ஆகிய நாடுகளில் தற்போது இந்த நோய்பரவி வருகின்றது. இலங்கையில் முன்னேற்பாடாக நாட்டில் 20 வைத்தியசாலைகளில் விசேட வாட்டுக்களை ஒதுக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பறவைக்காய்ச்சலால் பீடிக்கப்பட்டவர்களுக்கென சிகிச்சையளிக்க தாதிகளுக்கு விசேட பயிற்சிகளும் அளிக்கப்பட்டுள்ளன.

நாட்டில் பறவைக்காய்ச்சல் தொற்ற ஆரம்பித்தால் தேசிய மட்டத்திலும் மாவட்ட மட்டத்திலும் செயற்பட குழுக்கள் நிய மிக்கப்பட்டுள்ளதாகவும் அக்குழுக்களுக்கு தேவையான ஆலோசனைகளை வழங்கி உள்ளதாகவும் வைத்திய நிபுணர் குறிப்பிட்டார். பண்ணை உற்பத்தியாளர்கள் மற்றும் சுகாதாரதிணைகளத்தினதும் உதவிகள் இதற்காக பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

இலங்கையில் பறவைக் காய்ச்சல் பரவுவதைத் தடுக்கும் திட்டத்துக்கு உலக சுகாதார அமைப்பு 350 மில்லியன் ரூபாயை நிதியுதவியாக வழங்கியுள்ளதாகவும் அதன் மூலம் வைத்தியசாலைகளின் இரசாயன கூடங்களை நவீனமயப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர்மேலும் தெரிவித்தார்.

(ச-5)

## கிளி, முல்லை மாவட்டங்களுக்கு நியமனம் பெற்ற பட்டதாரிகளுக்கு மூன்று மாத கால அவகாசம்

(திருகோணமலை)

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் ஆசிரியர் நியமனம் பெற்ற வெளிமாவட்டத்தைச் சேர்ந்த பட்டதாரிகள் எதிர்வரும் மூன்று மாதங்களுக்குள் தமது கடமையை பொறுப்பேற்றுக் கொள்ளலாமென வடக்கு மாகாண ஆளுநர் டிக்ஸன் டெலபண்டார அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் டிக்ஸன் டெலபண்டார வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்கு அறிவுறுத்தியுள்ளதாவது;

வடக்கு மாகாண கல்வி அமைச்சினால் புதிதாக கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் நியமனம் வழங்கப்பட்ட வெளிமாவட்டத்தைச் சேர்ந்த பட்டதாரி ஆசிரியர்கள் தமது கடமையை மூன்று மாதத்திற்குள் பெறுப் பேற்றக் கூடியவாறு கால அவகாசம் வழங்கு மாறும்தற்போது கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் நடைபெற்று வரும் யுத்த சூழ்நிலை காரணமாக அங்கு வெளிமாவட்டதிலுள்ளவர்கள் செல்ல முடியாத நிலையிலே இவ்வாறு கால அவகாசம் வழங்கப்படுவதா கவும் வடக்கு மாகாண ஆளுநர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் நியமனம் பெற்ற வெளி மாவட்ட பட்டதாரி ஆசிரியர்கள் தமது கடமையை தற்போது பெற்றுக்கொள்ளமுடியாது என வும் வடக்கு மாகாணத்திலுள்ள ஏனைய மாவட் டங்களில் தற்காலிக இணைப்பு பெற்றுத் தருமாறு சமூக சேவைகள் அமைச்சர் டக்ளஸ் தேவனந்தாவிடம் கேட்டிருந்தனர்.

இது தொடர்பில் அமைச்சரினால் ஆளுநரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

(ச-5)

## தீவகம், தென்மராட்சி வலயங்களுக்கு உதவிக் கல்விப்பணிப்பாளர் நியமனம்

(திருகோணமலை)

கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் அதிபராக இருந்த ஆ.சிறிஸ்கந்தமூர்த்தி தென்மராட்சி கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளராகவும், பலாலி ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளராகவிருந்த தி.ஜோன் குயின்ரஸ் தீவக கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளராகவும் வடக்கு மாகாண கல்வி அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி புதிதாக நியமனம் பெற்ற இரு உதவிக் கல்விப் பணிப்பாளர்களும் அந்தந்த வலயக் கல்விப்பணிப்பாளர்களினால் உரிய பொறுப்புகள் வழங்கப்படுமென வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எல்.இளங்கோவன் தெரிவித்தார்.

(ச-5)

## நிறைவேற்று அதிகாரமா?....

சதித்திட்டம் மேற் கொள்ளப்பட்டிருப்பதாகவும், அரசாங்கத்தின் வருமானத்தை நிறுத்தி மோதலை நிறுத்த வேண்டுமென கூறுவதற்கே அந்த வெளிநாட்டு சக்திகள் முயற்சிக்கின்றன எனவும் ஜனாதிபதி அமைச்சரவைக் கூட்டத்தில் கூறியிருப்பதாக இணையத்தளமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பிரதம நீதியரசரின் தீர்ப்பால் முன்னாள் திறைசேரிச் செயலாளர் பி.பி.ஜெயசுந்தர மற்றும் அசந்த.டி.மெல் ஆகிய இரண்டு பிரதான அதிகாரிகளை இழக்க வேண்டிய சூழல் தனக்கு ஏற்பட்டதாக ஜனாதிபதி அமைச்சரவைக் கூட்டத்தில் கூறியதாகவும் இந்த நிலைமை தொடர்வதற்கு அனுமதிக்க முடியாதுஎன அவர் குறிப்பிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவை கூடி ஒரு தீர்மானத்தை எடுக்கவேண்டும். அவ்வாறெனின் நான் மோதலை நிறுத்துகிறேன் என ஜனாதிபதி கூறியுள்ளார்.

ஜனாதிபதியின் கூற்றுக்கு வலு சேர்க்கும் வகையில் கருத்து தெரிவித்த சிரேஷ்ட அமைச்சரான மைத்திரிபால சிறிசேன அரசாங்கத்தின் கொள்கைகளுக்குள் நீதித்துறையை தலையிட அனுமதிக்க முடியாது என கூறியுள்ளார்.

நிறைவேற்று ஜனாதிபதிக்கு அடுத்ததாக, நாடாளுமன்றமே இந்த நாட்டில் அதிகாரம் வாய்ந்தது என அமைச்சர் மைத்திரிபால சிறிசேன சுட்டிக்காட்டினார். உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சக்திகள் அரசியல் தலைவர்களுக்கு இருக்கும் மரியாதையைக் கெடுப்பதற்கு முயற்சிப்பதாகவும் கூறினார்.

பிரதம நீதியரசர் தனது பதவியில் இருந்து நீக்கப்பட வேண்டுமென அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவும் கூறியுள்ளார்.

அதேநேரம் தற்போது தோன்றியிருக்கும் பிரச்சினை குறித்து சிந்தித்து தீர்மானம் எடுக்க வேண்டுமே தவிர உடனடியாகத் தீர்மானமொன்றை எடுக்கக் கூடாது என வெளிவிவகார அமைச்சர் றோகித போகல்லாகம ஏனைய அமைச்சர்களுக்கு ஆலோசனை வழங்கியதாகவும் அந்த இணையத்தள செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளது.

(ச-5)

## திருமுறிகண்டியிலிருந்து...

கடந்த செவ்வாய் புதன்கிழமைகளில் கிளாலி மற்றும் கிளிநொச்சியின் புறநகர்ப் பகுதிகளில் இடம்பெற்ற மோதலில் 50 படையினரின் சடலங்களை தாம் கைப்பற்றியுள்ளதாகவும் புலிகள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி புறநகர் பகுதிகளில் புலிகளின் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக அமைக்கப்பட்டுள்ள மண்மேடுகளை தகர்த்தியவாறு படையினர் மேற்கொண்ட முன் நகர்வின் போது விடுதலைப் புலிகள் பெரும் இழப்புக்களை எதிர்நோக்கியுள்ளதுடன் படைத்தரப்புக்கும் சிறியளவில் சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

அத்துடன் கடந்த மூன்று தினங்களாக தொடர்ந்து இடம்பெற்றுவரும் இம்மோதல்களின் போது விடுதலைப் புலிகளின் 15 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்தார்.

இது தொடர்பில் இராணுவப் பேச்சாளர் மேலும் கூறியதாவது,

கிளிநொச்சியில் 4 முனைகளில் இருந்து முன் நகர்வினை மேற்கொண்ட படையினர் விடுதலைப் புலிகளின் நிலைகள் மீது கடும் தாக்குதல்களை மேற்கொண்டவாறு முயற்சியைத் தொடர்ந்தனர். இதில் புலிகள் தரப்புக்கு சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

அத்துடன் படையினரின் முன் நகர்வினை முறியடிக்கும் வகையில் விடுதலைப் புலிகளால் இதன்போது மோட்டார் மற்றும் ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

இதில் படைத்தரப்புக்கு சிறியளவில் சேதங்கள் ஏற்பட்டுள்ளன. மோதல்களையடுத்து படையினர் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையொன்றின் போது விடுதலைப் புலிகளின் 4 சடலங்கள் உட்பட ஆயுதங்கள் பலவும் மீட்கப்பட்டுள்ளன.

கிளைமோர்க் குண்டுகள் 2, ரி 56 ரக துப்பாக்கிகள் மூன்று, துப்பாக்கி ரவைகள் 2040 மற்றும் தகவல் பரிமாற்றும் கருவிகள் 2 போன்ற ஆயுதப் பொருட்களே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன.

இதேவேளை யாழ்ப்பாணம், முகமாலைப் பகுதியை நோக்கி முன் நகர்வினை மேற்கொண்டுவரும் இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகளால் கடும் மோட்டார்த் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதில் படைத்தரப்புக்கு சேதம் ஏற்பட்டுள்ளது. மேலும் முல்லைத்தீவு குமுழமுனை மற்றும் அம்பகாமம் பகுதிகளிலும் இரு தரப்புக்குமிடையில் கடும் மோதல்கள் இடம்பெற்றுள்ளன.

மோதலையடுத்து படையினரால் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளின்போது விடுதலைப் புலிகளின் இரு சடலங்கள் உட்பட மோட்டார் எறிகணைகள் 12, ஆர்.பி.ஜி. ரக குண்டு ஒன்று, கைக்குண்டுகள் 5 போன்ற ஆயுத உபகரணங்களும் மீட்கப்பட்டுள்ளன என்றார்.

(ச-5)

# இன்று ஒரு தகவல்

## வெற்றியின் ரகசியம்

சில பேருக்கு தொட்டதெல்லாம் வெற்றியாக முடியும். சில பேருக்குதொட்டதெல்லாம் தோல்வியாக முடியும்.

இதில் உள்ள ரகசியம் என்ன?

அதைத் தெரிந்து கொள்ள இந்தக் கதையைக் கேளுங்கள்.

ஜப்பானில் ஒரு பெரிய வீரர் இருந்தார். அவர் பெயர் நொபு நாகா. அவரிடம் வெகு குறைவான படை வீரர்களே இருந்தனர்.

சிறிய படைப் பலத்தை வைத்துக் கொண்டு பெரிய பெரிய படைகளையெல்லாம் முறியடித்தவர் அவர். அவ்வளவு சாமர்த்தியம் உள்ளவர்.

ஒரு தடவை எதிரி மீது படையெடுத்துச் சென்றார். அப்பொழுது அவருடைய படை வீரர்களுக்கும் தளபதிக்கும் ஒரு சந்தேகம் வந்து விட்டது.

இந்தப் போரில் நாம் வெற்றிபெற முடியுமா? என்ற சந்தேகம் தான் அது .

இருந்தாலும் இதை எப்படி தலைவரிடம் தெரிவிப்பது என்று யோசனை பண்ணினார்கள். இருந்தாலும் துணிச்சலை வரவழைத்துக் கொண்டு மெதுவாகக் கேட்டனர்.

அவர் பார்த்தார். 'சரி நாம் முடிவு செய்யாமல் புத்த விகாரைக்குப் போய் பூவா, தலையா போட்டுப் பார்ப்போம். அதன் பிரகாரம் செயல்படுவோம் என்றார்.

ஏனெனில், போருக்குச் செல்லும் போது முழு மனதுடன் போக வேண்டும். ஊசலாட்டம் இருக்கக் கூடாது என் றார்.

தளபதியும் படை வீரர்களும் ஒத்துக் கொண்டார்கள். உடனே அவர்கள் விகாரைக்குப் போனார்கள், தலைவர் உள்ளே போனார். வெளியில் எல்லோரும் காத்துக் கொண்டிருந்தனர். சிலமணி நேரத்திற்குப் பின் அவர் வெளியே வந்தார்.

தளபதி -துணைத்தளபதி அனைவரையும் அருகில் கூப்பிட்டு அவர்கள் முன்னிலையில் ஒரு தங்கக் காசை எடுத்தார்.

'இதோ பாருங்கள் இப்பொழுது பூவா-தலையா போட்டுப் பார்ப்போம். தலை விழுந்தால் ஜெயித்து விடுவோம். பூ விழுந்தால் அதைத் தவிர்த்து விடுவோம் விதி இப்பொழுது நம் கையில் தான் இருக்கிறது. இங்கு என்ன தீர்ப்பு கிடைக்கிறதோ அதன் படி நடப்போம்' என்று சொல்லி விட்டு தங்கக் காசை சுண்டினார்.

அது சுழன்று மேலே போய் கணீரென கீழே விழுந்தது. எல்லோரும் அதை ஆவலோடு பார்த்தார்கள். தலை விழுந்திருந்தது.

ஒரே மகிழ்ச்சி. ஆரவாரம்- அதன் பின்னர் தான் அவர்களுக்கு சந்தேகம் வரவில்லை. உறுதியான முடிவோடு போருக்குப் போனார்கள். வெற்றியுடன் திரும்பினார்கள் வெற்றி விழா நடந்தது. தளபதி பேசினார் .இந்த வெற்றியை காசு தான் முடிவு செய்தது. அதனால் விதியை வெல்ல யாரால் முடியும்? என்று சொல்லி விட்டு உட்கார்ந்தார். அப்பொழுது அந்தத் தலைவர் தன்னிடமிருந்த தங்கக் காசை எடுத்து ரகசியமாக தளபதியிடம் கொடுத்தார்.

தளபதி அதை வாங்கிப் பார்த்தார். அந்த நாணயத்தின் இரு பக்கமும் தலை தான் இருந்ததாம். இதிலிருந்து என்ன தெரிகிறது.

வெற்றியின் ரகசியம் மன உறுதி தான். எதைச் செய்தாலும் மனக் குழப்பம் இருக்கக் கூடாது. எண்ணித் துணிக கருமம்- என்பது வள்ளுவர் வாக்கு.

பரீட்சை ரிசல்ட் வரும் சமயம் ஒரு பையன் காசைக் சுண்டிப் போட்டு பூவா தலையா என்று பார்த்துக் கொண்டிருந்தான்.

'என்ன... பாஸ் - பெயில், பார்க்கிறாயா?' என்று கேட்டேன்.

'ரிசல்ட்டைப் பொறுத்த வரையில் எனக்கு சந்தேகமில்லை சேர். ரிசல்ட் வந்த பிறகு அப்பா என்னை திட்டுவதோடு விட்டு விடுவாரா இல்லை அடிப்பாரா என்பதை தெரிந்து கொள்வதற்குத் தான் இது!' என்றான்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

## க.பொ.த. சாதாரணதரப் பரீட்சை

# கணித பாட வினாத்தாள் சர்ச்சை குறித்து ஆராய இரு உயர் மட்டக் குழுக்கள் நியமனம்

## கல்வி அமைச்சு தெரிவிப்பு

(கொழு ம்பு)

க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் கணித பாட வினாத்தாள்கள் தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினைகளை ஆராய்வதற்கு 2 உயர் மட்டக் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

கல்வியமைச்சின் செயலாளர் உள்ளிட்ட ஒரு குழுவை கல்வியமைச்சர் சுசில் பிரேம ஜயந்தவும் மற்றும் ஒரு குழுவை பரீட்சைகள் ஆணையாளர் அனுர எதிரிசிங்க நியமித்துள்ளது.

கல்வியமைச்சரினால் நியமிக்கப்பட்டுள்ள குழுவில் அமைச்சின் செயலாளர், பரீட்சைத் திணைக்கள ஆணையாளர், பிரதி ஆணையாளர் கணித பாடத்தில் நிபுணத்துவம் பெற்ற தேசிய கல்வி நிறுவகத்தின் பணிப் பாளர்கள் மற்றும் கணித பாட ஆசிரியர்கள் அடங்கியுள்ளனர்.

தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் கணித பாடத்திற்கு தோற்றிய மாணவர்களுக்கு அநீதி இழைக்கப்படாத விதத்தில் மேற் கொள்ளப்பட வேண்டிய வழிமுறைகள் தொடர்பாக சிபார்சுகளை வழங்குவதோடு, அதற்கேற்ப தீர்மானங்களை எடுக்கவும் இக் குழுவுக்கு பணிப்புரைகள் வழங்கப்பட்டுள்ளன.

பரீட்சைகள் திணைக்கள ஆணையாளரினால் நியமிக்கப்பட்டுள்ள குழு, கணித பாட வினாத்தாள் பாட விதானங்களுக்கு அமைவாக உள்ளதா? பிழைகள் உள்ளனவா? மாணவர்களுக்கு கேள்விகளை விளங்கிக் கொள்ள முடியாதளவுக்கு மொழி புரியாதவாறு உள்ளதா? என்பது பற்றி ஆராயும்.

இவ்விடயம் தொடர்பாக பரீட்சைகள் திணைக்கள ஆணையாளருக்கு நான்கு தினங்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு இக் குழுவினருக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாகவும் அமைச்சு மேலும் குறிப்பிட்டுள்ளது (5)

# ஆசிரியர் சேவை பதவி உயர்வு, உள்ளீர்ப்பு : ஒரே நடைமுறையை பின்பற்ற நடவடிக்கை

## உரிய திணைக்களங்களுக்கு கல்வி அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கை ஆசிரியர் சேவையில் உள்ளவர்களுக்கு பதவி உயர்வு வழங்குவதிலும், உள்ளீர்ப்பு செய்வதிலும் நாடளாவிய ரீதியில் மிகத் திருத்தமான ஒரே நடை முறையை பின்பற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய உரிய எடுத்துக்காட்டுகள் தகுந்த உதாரணங்களுடன் கூடிய மேலதிக அறிவுறுத்தல் விளக்கங்களை கல்வி அமைச்சு வழங்கியுள்ளது.

கல்வி அமைச்சினால் 2008.8. 22 ஆம் திகதியிடப்பட்ட அறிவுறுத்தல் விளக்கக் கடிதம் சகல மாகாணக் கல்வி அமைச்சுகள், மாகாணக் கல் வித் திணைக்களங்கள் மற்றும் வலயக் கல்வி அலுவலகங் களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

ஆசிரியர் சேவை பதவியுயர்வு மற்றும் சேவை உள்ளீர்ப்பு செய்வதில் மாகாணத்துக்கு மாகா ணம், வலயத்துக்கு வலயம் மாறுபட்ட நடை முறைகள் பின்பற்றப்படுவதாகவும் இதனால் பல ஆசிரி யர்கள் பாதிப்புக்களுக்கு உள்ளாகி இருப்பதாகவும் கல்வி அமைச்சின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டதை அடுத்தே கல்வி அமைச்சின் செயலாளர் மேலதிக அறிவுறுத்தல் விளக்கத்தை அனுப்பி வைத்துள்ளார்.

அவ்வறிவுறுத்தல் கடிதத்தில் ஆசிரியர் சேவை தரம் 1 க்கு பதவி உயர்வு வழங்குவதற்கு பின்பற்ற வேண்டிய உதாரணமாக கூறப்பட்டிருப்பதாவது,

''களனி கல்வி வலயத்தைச் சேர்ந்த ஆர். டி.ஏ. ஜெயசுந்தர 1984.05. 02 ஆம் திகதி கலைப் பட்டதாரி பயிலுனர் உதவி ஆசிரியராக நியமனம் பெற்றார்.

1994. 10. 06 இல் ஆசிரியர் சேவை 2 :II 5 ஆம் படி நிலையில் வருடச் சம்பளம் 60 ஆயிரத்து 120 ரூபா உள்வாங்கப்பட்டு 1996 பட்டப்பின் கல்வி டிப்ளோமா (தொழில்சார் கல்வித் தகைமை) புள்ளியுடன் 1998.05. 02 ஆம் திகதி ஆசிரியர் சேவை வகுப்பு 2:1 உள்ளீர்ப்புச் செய்யப்பட்டு 2003. 05.02 ஆம் திகதி ஆசிரியர் சேவை தரம் 1 உள் ளீர்ப்புச் செய்யப்படுகின்றார்''.

சம்பளப் படியை இணங்காணலும் படியை வழங்கலும் என்ற தலைப்புடன் 2008.8.22 ஆம் திகதி அனுப்பி வைக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல் தாபனக் கோவை பணிப்பாளர் மற்றும் சம்பள நிர்ணய பதவி ஆளனி ஆணைக்குழுவின் ஒப்புதலுடன் அனுப்பி வைக்கப் பட்டுள்ளன.

(5)

## இராசி பலன்

*19.12.2008*
*(மார்கழி 4,வெள்ளிக்கிழமை)*
*பூரம் முற்பகல் 8.49மணிவரை*
*ஸப்தமி முற்பகல்10.17 மணிவரை*
*இராகுகாலம் 10.54 -12.24 மணிவரை*
*சுபநேரம் 6.24-7.54மணிவரை*

| | |
|---|---|
| மேடம் | தேக ஆரோக்கியம், எடுத்த காரியம் கை கூடும், மனமகிழ்ச்சி, புதிய திருப்பம். |
| இடபம் | முயற்சி தாமதம், குடும்பக் கவலை, வேலைச் சுமை, ஆரோக்கியக் குறைவு. |
| மிதுனம் | உடல் சோர்வு, தொழில் ஆர்வம், வாகன சுகம், உறவினர் சந்திப்பு. |
| கடகம் | பிரயாண நன்மை, நினைத்த காரியம் கைகூடும், தனலாபம், வாக்கு மேன்மை. |
| சிங்கம் | கற்பனை மிகுதி, விவாதம், காரிய தாமதம்,அதிக செலவு. |
| கன்னி | நண்பர்கள் சந்திப்பு,விருந்துபசாரம், நல்ல முயற்சி,போசன சுகம். |
| துலாம் | உறவினர் மனஸ்தாபம்,எதிர்பாராத நன்மை,சயனசுகக் குறைவு,சுப செலவு. |
| விருச்சிகம் | எடுத்த காரியம் கைகூடும், உறவினர் உதவி, போசனசுகம். |
| தனுசு | புதிய விடயம், தொழில் மேன்மை, நண்பர்கள் உதவி, காரியஅனுகூலம். |
| மகரம் | அதிக பிரயாசை,எதிர்பாராத செலவு, பிரயாணம், முயற்சிதாமதம். |
| கும்பம் | புனல்வியாதி, வீண்பிரச்சினை, வாகனபயணம், வேலைச்சுமை. |
| மீனம் | திடீர் பயணம்,செல்வாக்கு,பொருள் சேர்க்கை, நண்பர்கள் உதவி. |

வளவன்

# நாட்டில் வேலையில்லாப் பிரச்சினை அடுத்த ஆண்டு மேலும் உயர்வடையும்

## லால்காந்த எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

அடுத்த வருடத்தில் வேலையில்லாப் பிரச்சினை வெகுவாக உயர்வடையும் என ஜே.வி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் கே.டி.லால்காந்த தெரிவித்துள்ளார்.

கொழும்பு புதிய நகர மண்டபத்தில் நடை பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங் கத்தின் தூர நோக்கற்ற பொரு ளாதார கொள்கைகளினால் எதிர்காலத்தில் பெரும் நிதி நெருக்கடி ஏற்படக் கூடும் என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மேலும் எதிர்வரும் வருடத்தில் அதிகள வானோர் தொழில்களை இழக்க நேரிடும் எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதேவேளை தொழிலாளர்களும் வியாபாரத் தில் பங்காளிகளாக அங்கம் வகிக்கக் கூடிய ஓர் சூழ் நிலை உருவாக்கப்பட வேண் டும் என ஜே. வி.பி.யின்நாடாளுமன்ற உறுப்பினர் அனுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (ஓ-6)

## சேதமடைந்த பகுதியை திருத்தும் பணிகள்

(யாழ்ப்பாணம்)

கடந்த மாத இறுதியில் ஏற்பட்ட நிஷா வெள்ள அனர்த்தத்தின் போது மரம் விழுந்து சேதத்திற்குள்ளான மந்திகை அரசினர் வைத்தியசாலையின் 3 ஆவது நோயாளர் விடுதியை திருத்தும் பணியில் மந்திகை ஆதார வைத்தியசாலை அபிவிருத்திச் சபையினர் ஈடுபட்டுள்ளனர். (ஓ-4-134)

## மாதாந்த உதவிப் பணம்

(யாழ்ப்பாணம்)

சுண்டுக்குளி தபாலகத்தில் இதுவரை பொதுசன உதவிப் பணம் பெறாதோர் உடனடியாக தங்களுடைய மாதாந்த உதவிப் பணத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு சுண்டுக்குழி தபால் அதிபர் கேட்டுள்ளார்.

அத்துடன் இந்த மாதத்திற்குரிய மாதாந்த வரிப்பணம் 10ஆம் திகதி வரையும் நீடிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். (ஓ-4-134)

## கிணறு துப்புரவுப் பணி

(யாழ்ப்பாணம்)


கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் உள்ள 13 பொதுக் கிணறுகளை இறைத்து துப்புரவு செய்வதற்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்க கோப்பாய்ப் பிரிவு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதில் முதல் கட்டமாக 3 கிணறுகளை துப்புரவாக்க நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ஓ-4-134)

## பாதிக்கப்பட்டோருக்கு பொருட்கள் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

'சொண்ட்' அரசசார்பற்ற நிறுவனம் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் அனுசரணையுடன் 'நிஷா' அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட, தெல்லிப்பளைப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள அளவெட்டி மேற்கு, அளவெட்டி தெற்கு மற்றும் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் உள்ள பிரான்பற்று மற்றும் சாவற்காடு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 403, குடும்பங்களுக்கு உணவல்லாத பொருட்களான பாய், வாளி, குடம், சவர்க்காரம், படுக்கை விரிப்பு, நுளம்பு வலை மற்றும் குழந்தைகளுக்கான சவர்க்கார வகைகள் ஆகிய பொருட்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளது. (ஓ)



## யாழ்.செய்திகள்

## இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபன காப்புறுதியாளர்களின் சேத விபரக் கணிப்பீடு

(வட்டுக்கோட்டை)

யாழ். மாவட்டத்தில் நிஷா புயல் மற்றும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் காப்புறுதி செய்துகொண்டவர்களின் சேத விபரங்களை அந்த நிறுவனத்தின் உயர் அதிகாரிகள் நேரில் சென்று கணிப்பீடு செய்துள்ளனர்.

நிஷா புயல் மற்றும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட வர்த்தக நிலையங்கள், தனியார் வீடுகள் மற்றும் கட்டட நிர்மாணங்கள் போன்றவற்றிற்கு ஏற்பட்ட சேத விபரங்களை பார்வையிட்டு அவற்றைக் கணிப்பீடு செய்வதற்காக கொழும்பில் இருந்து "பயனியர் லொஸ் அஜஸ்ரஸ் பிறைவேட் லிமிட்டட்" நிறுவனத்தின் அதிகாரி ஜெகத் பீரிஸ் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ளார்.

அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட 35 இடங்களையும் அவற்றின் சேத விபரங்களை பார்வையிட்டுள்ளதாகவும் அவற்றின் விபரங்களை இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத் தாபனத்தின் கொழும்பு தலைமை அலுவலகத்தில் ஒப்படைக்கவுள்ளதாகவும் ஜெகத் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட காப்புறுதி செய்யப்பட்ட வாகனங்களின் சேத விபரங்களை இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் போர்முலாப் பிளஸ் பொறியியலாளர் ராஜகாந்தன் பார்வையிட்டு அவை தொடர்பான விபரங்களையும் கொழும்பு தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி வைத்துள்ளார்.

மேற்படி பாதிக்கப்பட்ட இடங்களை இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் நிர்வாக உத்தியோகத்தர் அ.சுபேசன் விற்பனை முகாமையாளர் பா.சத்தியன் ஆகியோரும் நேரில் சென்று பார்வையிட்டனர். (ச-27)

## சிறந்த விவசாயிகள் கௌரவிப்பு விழா

மாவட்ட மட்ட ரீதியாக 8 தலைப்புக்களின் கீழ் போட்டியிட்டு முதல் மூன்று இடங்க ளைப் பெற்று வெற்றியீட்டிய 24 விவசாயி களை கௌரவிக்கும் வைபவம் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். பிரதி விவசாயப் பணிப்பாளர் சி.சிவகுமார் தலைமையில் திருநெல்வேலி மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். விவசாய பீட பீடாதிபதி கலாநிதி திருமதி சி.சிவச்சந்திரன், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.பிராந்திய ஆணையாளர் திருமதி ப.சிவலிங்கம், யாழ். கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருமதி வ.அமிர்தலிங்கம், யாழ்.கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் எம். பற்றிக்டிறஞ்சன், யாழ். விவசாய ஆராய்ச்சி நிலையப் பொறுப்பதிகாரி திருமதி செ.விஜயரத்தினம், யாழ். தென்னை அபிவிருத்திச் சபை பிராந்திய முகாமையாளர் வ.மகாலிங்கம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். கௌரவிக்கப்படவுள்ள விவசாயிகளின் பெயர் விபரம் வருமாறு,

*சிறந்த நெல் உற்பத்தியாளர்*

பொ.தர்மலிங்கம்–சரசாலை தெற்கு, ப.பாலசிறீதரன்–வேலணை மேற்கு மத்தி, மா.நந்தகுமார்–கோப்பாய் தெற்கு.

*சிறந்த சேதனப் பண்ணையாளர்*

இ.இலட்சுமணர்–அச்செழு, சி.சிவயோகநாதன்–கரணவாய் கிழக்கு, நா.செல்வராசா–உரும்பிராய் வடக்கு.

*சிறந்த சுயவிதை நெல் உற்பத்தியாளர்*

தி.தங்கவேலு–நாவற்குழி கிழக்கு, மா. யோகேஸ்வரன்–கோப்பாய் தெற்கு, க.துரைசிங்கம்–கந்தரோடை மடீத்தடி.

*சிறந்த ஒருங்கிணைந்த பண்ணையாளர்*

அ.இராசேந்திரம்–சிறுவிளான், இளவாலை, இ.மாயகேஸ்வரன்–புத்தூர் கிழக்கு, மு. கந்தையா–நீர்வேலி மேற்கு.

*சிறந்த் பெண் தலைமைத்துவ விவசாயி*

கு.தனேஸ்வரி–நவக்கிரி, சு.கமலாதேவி–மாதகல், க.தவராணி–பறாளாய் சுழிபுரம்.

*சிறந்த சோளச் செய்கையாளர்*

செல்வி.ரேணுகா சோதிலிங்கம்–கெருடாவில் தெற்கு, சி.கிருபானந்தர்–சரவணை கிழக்கு, கு.உதயராஜ்–ஏழாலை வடக்கு.

*சிறந்த நிலக்கடலைச் செய்கையாளர்*

டானியல்டேவிட்–கோப்பாய் தெற்கு, சு.மகேந்திரன்–மாதகல், க.குணநாதன்–அத்தாய்.

*சிறந்த குரக்கன் செய்கையாளர்*

சி.தயாபரன்–உரும்பிராய் தெற்கு, ச.சுப்பிரமணியம்–கைதடி வடக்கு, க.சேனாதிராசா–நெடுந்தீவு. (ஓ-6)

## வர்ணனைச் சித்திரம் காண்பிக்கப்பட உள்ளது

(கொழும்புத்துறை)

தர்மசிறி பத்திராஜவின் தயாரிப்பு நெறியாள்கையில் உருவான 'In search of a road' எனும் வர்ணனைச் சித்திரம் நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்.பொதுசன நூலகத்தில் காண்பிக்கப்படவுள்ளது.

இவ் விபரணத்தில் சிங்கள, தமிழ்க்கலைஞர்கள் பங்கேற்று நடித்துள்ளார்கள். குறிப்பாக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கலாபூஷணம் ஜி.பி.பேமினஸ், குழந்தை ம.சண்முகலிங்கம், மறைந்த பேராசான் சிவஞானசுந்தரம் (நந்தி), ஜெயரஞ்சினி, தே.தேவானந் ஆகியோர் நடித்துள்ளனர். (ஓ-6)

## யாழ்.நகர அபிவிருத்திக்கான முதற்கட்ட நிதி ஒதுக்கீடு வழங்கப்பட உள்ளது

மஹிந்த சிந்தனையின் கீழ், சேரிகளற்ற செழிப்பான நகரங்களாக்கும் வறுமை ஒழிப்புத் திட்டத்தின் பிரகாரம் யாழ்.மாநகரசபையும் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளதுடன் இது குறித்த ஒப்பந்தம் அண்மையில் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரும், வட மாகாணத்திற்கான விசேட செயலணியின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா மற்றும் நகர அபிவிருத்தி, புனித ஸ்தலங்கள் அபிவிருத்தி அமைச்சர் தினேஸ் குணவர்த்தன ஆகியோருக்குமிடையில் கைச்சாத்திடப்பட்டன.

இத்திட்டத்தின் முதற்கட்டமாக யாழ். மாநகர சபையின் எல்லைக்குட்பட்ட திருநகர், நாவாந்துறை, பொம்மைவெளி, அரியாலை, கொழும்புத்துறை மற்றும் குருநகர் உட்பட யாழ்.பிரதேச செயலகத்திற்குட்பட்ட பல பகுதிகள் அபிவிருத்தி செய்வதற்கென தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

இத்திட்டம் யாழ்.மாநகர சபையுடன் இணைந்து மேற்கொள்ளப்படவுள்ளதுடன் இதற்கென ஒரு குழு அமைக்கப்பட்டு முதற் கட்ட நிதி ஒதுக்கீடுகள் வழங்கப்படுவ்துடன் இதன் தொடர்ச்சியாக ஏனைய பகுதிகளும் கட்டம் கட்டமாக அபிவிருத்தி செய்யப்படவுள்ளது. (ஓ)





திருமறைக்கலாமன்ற தினத்தை முன்னிட்டு திருமறைக் கலாமன்ற இளையோரவை உறுப்பினர்கள் 21 பேர் இரத்ததானம் செய்தனர். இந்நிகழ்வில் இளையோரவை உறுப்பினர் ஒருவர் இரத்ததானம் செய்வதையும், இதில் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

## இரத்ததான முகாம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க கோப்பாய்ப் பிரிவு மற்றும் லயன்ஸ் கழகம் இணைந்து நடத்தும் இரத்ததான முகாம் எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் வாரத்தில் கோப்பாயில் நடைபெறவுள்ளது.

இதில் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க தொண்டர்கள், லயன்ஸ்கழக உறுப்பினர்கள் மற்றும் பொதுப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஓ-4-134)

## ஞாபகார்த்த விழா

(யாழ்ப்பாணம்)

ஹன்டி பேரின்பநாயகத்தின் 31 ஆம் ஆண்டு ஞாபகார்த்த விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு வட்டுக்கோட்டை ஸ்ரீகணேச வாசிகசாலை மண்டபத்தில் சி.இராமச்சந்திரா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஞாபகார்த்த உரையை இளைப்பாறிய தபாலதிபர் மு.சண்முகம், கொக்குவில் இந்துக் கல்லூரி இளைப்பாறிய அதிபர் பி. கமலநாதன், யாழ். இந்துக் கல்லூரியின் இளைப்பாறிய அதிபர் அ.பஞ்சலிங்கம், முன்னாள் தொழிற்சங்கவாதி வே.சிவராசா ஆகியோர் ஆற்றவுள்ளனர்.

அத்துடன், கண்ணகை அம்மன் கோவில் அறநெறிப் பாடசாலை மாணவர்கள் வழங்கும் "இவர்கள் தான் அவர்" வில்லுப் பாட்டும் இடம்பெறவுள்ளது. (ஓ-2)

## வீதியின் அவல நிலை

(ஊர்காவற்றுறை)

தீவகம் வடக்கு ஊர்காவற்றுறை பிரதேச பொலிஸ் நிலையம் முன்பாக பயணிகள் செல்வது தடைசெய்யப்பட்டுள்ளதால் தபால் நிலையம் முன்பாக புதிய வீதி திறக்கப்பட்டுள்ளது.

இந்த வீதி ஆதிவைரவர் ஆலயம் ஊடாக புனித–அந்தோனியார் வீதிக்குச் சென்று பின்பு ஆஸ்பத்திரி வீதிக்குச் செல்கின்றது.

பயணிகள், பாடசாலை மாணவ மாணவிகள், வைத்தியசாலைக்கு செல்லும் நோயாளர்கள், ஊழியர்கள் அனைவரும் இந்த களி மண் வீதியையே பாவித்து வருகின்றனர்.

மழைகாலங்களில் இவ்வீதி வழுக்கல் கொண்டதாக இருப்பதால் பயணிகள் வழுக்கி விழுந்து எழுந்து செல்வதைக் காணக் கூடியதாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஓ-72)

## வருடாந்த திருவிழா

(ஊர்காவற்றுறை)

தீவகத்தின் பிரபல யாத்திரைத் தலமாக விளங்கும் எழுவைதீவு புனித–தோமையார் வருடாந்த திருவிழா கடந்த 12ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி மாலை 4 மணிக்கு ஆயத்த வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

நாளை மறுநாள் காலை6.30 மணிக்கு திருவிழாத் திருப்பலியும் அதனைத் தொடர்ந்து திருச்சொரூப பவனி ஆசீர் ஆகியவற்றுடன் திருவிழா நிறைவு பெறுகின்றது. இவ் ஆலயத்திற்கான போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாக ஊர்காவற்றுறை பங்குத்தந்தை அறிவித்துள்ளதாக தெரிய வருகின்றது. (ஓ-72)

## 'மாசில்லாத குழந்தைகள்' திருவிழா

(ஊர்காவற்றுறை)

பரிசுத்த கத்தோலிக்க திருச்சபை எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை "மாசில்லாத குழந்தைகள்" திருவிழாவை கொண்டாடுகின்றது. யேசு பிறந்து மூன்றாம் நாள் இரக்கமில்லாத ஏரோது அரசன் யேசுவைக் கொல்ல சதி செய்கின்றான்.

ஆனால் இது எப்படியோ தேவ தூதர்களுக்கு தெரிந்து பாலகர் யேசுவை எகிப்துக்கு எடுத்துச் செல்லுமாறு பெற்றோர்களிடம் கூறியதையடுத்து பிறந்த சகல 2 வயதுக்குட்பட்ட குழந்தைகளை கொல்லுமாறு சேவகர்களுக்கு ஏரோது அரசன் உத்தரவிடுகின்றான். பச்சிளங் குழந்தைகள் பரிதாபமாக உயிர் இழக்கின்றனர். இதை நினைவுபடுத்து முகமாகவே "மாசில்லாத குழந்தைகள்" திருவிழா நடைபெற்று வருகின்றது. (ஓ-72)

# இலங்கையில் தமிழர் 16

பேராசிரியர்
கா. இந்திரபாலா

முன்பு பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்தின் படி, ஓர் இடத்தில் பேசப்பட்ட மொழிக்குப் பதிலாக அவ்விடத்தில் வேறு மொழி பேசப்படும் போது அம் மொழிமாற்றம் புதிய மொழியைப் பேசும் மக்கள் கூட்டம் பெருந்தொகையில் வந்து பழைய குடிகளை அகற்றியதன் விளைவு என்று கொள்ளப்பட்டது. ஆனால் இப்பொழுது மக்கள் மாற்றம் நடைபெறாது மொழி மாற்றம் ஏற்படலாம் என்பதைத் தொல்லியலாளர் ஏற்கின்றனர்.

தொல்லியலாளர் பேராசிரியர் கோலின் றென்புறூ இதுபற்றி எழுதிய நூலில் எவ்வாறு ஒரு பிரதேசத்து மக்கள் மத்தியில் ஒரு காலத்தில் பேசப்பட்ட மொழி வழக்கற்றுப் போகப் புதிய ஒரு மொழி தாய் மொழியாகின்றது என்பதை விளக்கியுள்ளார். தாய்மொழி மாற்றத்துக்கான ஒரு முக்கிய காரணமாக அவர் காட்டுவது உயர்குழாத்தினர் (சமூக நுண்புலத்தார்) ஆதிக்கம் என்ற கோட்பாடு ஆகும்.

இக்கோட்பாட்டின்படி, தாய்மொழி மாற்றம் இவ்வாறு ஏற்படுகின்றது: ஒருமொழி பேசப்படும் ஒரு குறிப்பிட்ட பிரதேசத்திற்கு ஒழுங்கான முறையில் நன்கு இயங்கக்கூடிய ஒரு சிறு கூட்டத்தினர் வேறு ஒரு மொழி பேசுவோராய் வெளியில் இருந்து வருகின்றனர்.

அப்பிரதேசத்தில் வாழும் மக்களைக் காட்டிலும் இப்புதிய கூட்டத்தினர் முன்னேற்றமான சமூக அமைப்பும் ஒழுங்கு முறையும் உடையவர்களாய் முன்பிருந்த மக்கள் (சுதேசிகள்) மத்தியில் ஆதிக்கம் பெறுகின்றனர். இந்நிலையில் சுதேசிகள் மொழியும் புதிதாக வந்தோர் மொழியும் பக்கம் பக்கமாக பேசப்படுகின்றன.

சிறிது காலத்தின் பின் அங்கு பலர் இரு மொழி (சுதேசிகள் மொழியையும் புதிதாக வந்தோர் மொழியையும்) பேசுவோராக மாறுகின்றனர். சில சந்தர்ப்பங்களில் புதிதாக வந்தோர் சுதேசிகளுடைய சமூகத்தில் கலந்து விட்டதும் அவர்கள் மொழியும் மறைந்து விடுகின்றது. வேறு சந்தர்ப்பங்களில் புதிதாக வந்தோர் மொழியே மேலோங்குகின்றது. சுதேசிகள் பெரும் தொகையினராக இருந்த போதிலும் அவர்கள் மொழி வழக்கற்றுப் போக புதிய மொழி அவர்கள் தாய்மொழியாகின்றது. இதுவே தாய்மொழி மாற்றம்.

புதிதாக வந்தவர்கள் சமூகத்தில் உயர் குழாத்தினராக இருந்தமையால் அவர்கள் மொழி ஆதிக்கம் பெற்றுச் சுதேசிகளும் பேசும் மொழியாக மாறுகின்றது. இவ்வாறு உயர் குழாத்தினர் ஆதிக்கத்தால் சுதேசிகள் மத்தியில் படிப்படியாக தாய்மொழிமாற்றம் ஏற்படுவதுபோல் நீண்டகால வணிகத் தொடர்பாலும் தாய்மொழி மாற்றம் ஏற்படலாம் என்ற கருத்தை வேறு அறிஞர்கள் முன்வைத்துள்ளனர். தொல்லியலாளர் போனிங்ஹம் இதனை எடுத்துரைத்துள்ளார்.

இலங்கையைப் பொறுத்தமட்டில் இலங்கையில் வாழ்ந்த வரலாற்றுக்கு முற்பட்ட காலத்து மக்களுடன் வெளியிலிருந்து வந்த வணிகர்கள் நீண்டகாலம் தொடர்புகொண்டு வணிகம் நடத்தி இலங்கையில் ஓர் உயர் குழாத்தினராக ஆதிக்கம் பெற்றமை காலப் போக்கில் புதிய மொழிகள் இலங்கை மக்களின் தாய்மொழிகளாக இடம்பெற வழி வகுத்தது என்ற கோட்பாடு இந்நூலின் முக்கிய கருத்தாகும்.

இந்தியாவின் மேற்பகுதியிலிருந்தும் கிழக்குப் பகுதியிலிருந்தும் வந்த வணிகர்கள் பிராகிருத மொழிகளை இலங்கைக்கு கொண்டு வந்தனர். வணிகத் தொடர்பும் வேறு காரணிகளும் தென்னிந்தியாவிலிருந்து தமிழ் பேசுவோர் வருகைக்கு வழிவகுத்தன.

இதன்விளைவாக, இலங்கையின் சில பகுதிகளில் தமிழ்மொழிகளின் மேலாதிக்கமும் வேறு பகுதிகளில் பிராகிருத மொழியில் மேலாதிக்கமும் ஏற்படும் சூழ்நிலை உருவாகியது.

முக்கிய இனக்குழுக்களின் உருவாக்கம் இலங்கையிலேயே ஏற்பட்டது.

இலங்கையின் சிங்கள இனக்குழு தனக்கென ஓர் அடையாளம் பெற்ற இனக் குழுவாக இலங்கையிலேயே ஆக்கம் பெற்றது. இற்றைக்கு 2500 ஆண்டுகளுக்கு முன் இலங்கையில் வாழ்ந்த பல்வகைப்பட்ட இனக்குழுக்களின் சேர்க்கையின் விளைவாய் இந்த இனக்குழு உருவாகியது.

அக்காலத்தில் தூர வணிகர்களின் பொது மொழியாக தென்னாசியாவில் வழங்கிய பிராகிருதத்தை இலங்கையில் வாழ்ந்த மக்கள் மத்தியில் வணிகத்தின் பொருட்டு வந்தோர் பரப்பினர். இற்றைக்கு 2300 ஆண்டுகளுக்கு முன் வணிகர்களைத் தொடர்ந்து பௌத்த குருமாரும், சமண குருமாரும் இலங்கைக்கு வந்தனர். அவர்கள் வருகையால் உயர் குழாத்தினர் மொழியாக பிராகிருதம் மேலும் வலுப்பெற்றது. இதன் பின் 3 காரணிகள் பிராகிருதம் ஒரு பொது மொழியாக மாறுவதற்கு உதவின.

அவையாவன: அனுராதபுரத்தில் ஆட்சி நடத்திய மன்னனும் அவன் ஆண்ட மக்களும் பௌத்தத்தை தழுவியமை ; அனுராதபுரத்தில் வலுவுடைய ஒரு பௌத்த சங்கம் நிறுவப்பட்டமை ; உயர் குழாத்தினருடைய ஆவணங்களின் மொழியாக பிராகிருதம் பயன்படுத்தப்பட்டமை. இந்த முக்கிய காரணிகள் பல்வேறு இனக்குழுக்களை ஒன்றிணைத்து, அவர்களுக்கான ஒரு பொது மொழி உருவாக வழிவகுத்தன. இம் மொழி பிராகிருதமாக இருந்தாலும் அதன் முன் பேசப்பட்ட மொழிகளின் கூறுகள் சேர்க்கப்பட்டிருந்தன எனலாம். பல்வேறு இனக்குழுக்களும் மொழிகளும் இருந்த காரணத்தால் நாட்டில் ஒரு பொதுமொழி தேவைப்பட்டது. பிராகிருதம் அந்தத் தேவையை நிறைவுசெய்தது.

அக்காலகட்டத்தில் மொழியையும் இனக்குழுவையும் சமன் செய்ய முடியாது. அதாவது, ஒரு குறிப்பிட்டமொழியைப் பேசியோர் ஒரு குறிப்பிட்ட இனக்குழுவைச் சேர்ந்தவர்கள் என்று சமப்படுத்த முடியாது. பிரித்தானியா போன்ற இடங்களில் வரலாற்றிலிருந்து இதனை நன்கு உணரலாம்.

ஆகவே, இந்து ஆரிய மொழியாகிய பிராகிருத மொழியை இலங்கையில் ஆதி காலத்தில் பேசிய அனைவரும் ''இந்து ஆரியர்'' என்று சமன்படுத்துவது தவறாகும். இப்படிக் கூறுவோர் வட இந்தியாவின் இந்து ஆரிய மொழியைப் பரப்பிய மக்களே இலங்கைக்கு வந்தனர் என்ற தப்பான கருத்தைக் கொண்டுள்ளனர்.

இந்தியத் துணைக்கண்டத்தில் இந்து ஆரிய மொழிகள் அங்கு முன்னர் வாழ்ந்த பல்வேறு இனக்குழுக்கள் மத்தியில் பரவி, அவர்கள் மொழிகளுக்குப் பதிலாக புதிய தாய் மொழிகளாகின. அதாவது, அங்கும் தாய் மொழி மாற்றம் மூலமே ஆதிமக்கள் மத்தியில் புதிய இந்து ஆரிய மொழிகள் பரவின. இவ்வாறே திராவிட மொழிகளும் பல்வேறு ஆதி இனக்குழுக்கள் மத்தியில் தென்னிந்தியா மற்றும் இலங்கை ஆகிய இடங்களில் பரவி, அவர்கள் தாய் மொழிகளாகின.

இலங்கையில் இன்னொரு முக்கிய இனக்குழுவாக தமிழர் இனக்குழு உருவாகியது. இக்குழுவின் பரிணாம வளர்ச்சியும் சிங்கள இனக்குழுவின் பரிணாம வளர்ச்சியும் பக்கம் பக்கமாக ஏற்பட்டன. ஆதி இரும்புக்காலத்தில் தமிழர்( தமெட/தமிள) இலங்கையில் வாழ்ந்தனர் என்பதற்கு பாளி வரலாற்று மூலங்களும் மிக முற்பட்ட கல்வெட்டுக்களும் சான்று பகருகின்றன. அதே காலத்தில் தமிழ் நாட்டுப் பகுதியிலிருந்து பண்பாட்டுச் செல்வாக்குகள் பரவியமைக்கு தொல்லியல் சான்றுகள் கிடைத்துள்ளன.

(தொடரும்)

# மாணவர்கள் பரீட்சைகளை 2 வெற்றிகொள்வது எவ்வாறு?

திருமதி மலர்விழி வெங்கடறமணா
B.Sc.(Hons)
ஆசிரியை சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
யாழ்ப்பாணம்.

ஒவ்வொரு மாணவரும் படிக்கும் பொழுது ஒரு குறித்த இலக்கை வைத்து அதை நோக்கி முன்னேறுங்கள்.

பாடங்களை மனனம் செய்தல், அவற்றை ஞாபகத்திற்கு கொண்டு வருதலானது மூன்று படி முறைகளைக் கொண்டது.

Learning (கற்றல்)
Retention (நினைவில் வைத்திருத்தல்)
Recognition (மீட்டளித்தல்)

உங்களுக்கு ஒரு செய்யுளை மனனம் செய்யுமாறு பணிக்கப்பட்டால் நீங்கள் முதலில் செய்யுளை கற்கிறீர்கள். Learning - கற்றறிதல் மூலம் தகவலை ஞாபகத்திற்குள் புகுத்துகிறீர்கள். Retention - அதனை ஞாபகத்தில் வைத்துக் கொள்கிறீர்கள். Recognition - ஆசிரியர் முன்னிலையில் செய்யுளை ஒப்புவிக்கிறீர்கள்.

ஞாபகசக்தி வினைத்திறனாக அமைய வேண்டுமாயின் மேற்படி மூன்று படி முறைகளிலும் வலிமை வாய்ந்ததாக இருக்க வேண்டும். எனவே சிறந்த ஞாபகசக்தியை ஏற்படுத்திக் கொள்ள முதலில் செய்ய வேண்டியது என்ன?

சிறந்த கற்றல் சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொள்வது அதாவது கற்கும் சந்தர்ப்பத்தில் கருத்தூன்றிக் கற்றல் வேண்டும். ஞாபகச் செயன்முறையின் முதலாவது படிமுறை கற்கும் சந்தர்ப்பத்தில் கருத்தூன்றிக் கற்றல் தகவல் களஞ்சியப்படுத்தலை ஏற்படுத்துகிறது.

மூளை, நரம்புத்தொகுதி ஆகியவற்றின் கூட்டான செயற்பாடு காரணமாகவே ஞாபகச் செயற்பாடு நிகழ்கிறது. ஞாபகம் என்பது 3 படி முறைகளைக் கொண்ட ஒரு செயன்முறை

1) Sensory memory (புலன் சார் ஞாபகம்)
2) Short term memory (குறுகிய கால ஞாபகம்)
3) Long term memory (நீண்ட கால ஞாபகம்)

எமது புலனுறுப்புகளினூடாக நிதமும் மூளைக்கு செய்திகள் அனுப்பப்பட்டுக் கொண்டிருக்கும் இது Sensory memory நீங்கள் ஒரு பொருளைப் பார்த்த பின் 0.25 செக்கன் வரையும் கேட்பவை 4 செக்கன் வரையும் மாத்திரம் Sensory memory நிலைத்திருக்கும். பார்த்தவற்றை இனம் கண்டவுடன் Short term memory நிலை உருவாகும். இது சிறிது நேரமே ஞாபகத்தில் நிலைத்திருக்கும். பார்த்தவற்றை இனங்கண்டவுடன் Short term memory நிலை உருவாகும். இது சிறிது நேரமே ஞாபகத்தில நிலைத்திருக்கும். இதை நாம் நிரந்தரமாக ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டும் எனில் இவற்றை Long term memoryக்கு அனுப்ப வேண் டும்.

Short term memory க்குள் தேக்கி வைக்கக்கூடிய தகவல்களின் அளவு மிக குறைவு. நீங்கள் தொடர்ச்சியாக நீண்ட நேரம் கற்கும் பொழுது Short term memory க்குள் வந்தடையும் தகவல்களின் அளவு அதிகரிக்கிறது. அதை Long term memory க்குள் அனுப்பாவிடின் ஞாபகத்தில் இருந்து நீங்கி விடுகிறது. பரீட்சைக் காலத்தில் நீங்கள் தொடர்ந்து அதிகமாகப் படிக்கும் பொழுது படிப்பை மறந்து போவதற்குக் காரணம் இது தான். எனவே சிறிய பகுதியாக பிரித்துப் படித்து பின் மீட்டல் செய்து அதை Long term memoryக்கு அனுப்பிய பின் அடுத்த பகுதியைப் படியுங்கள்.

எமது Long term memory இலட்சக் கணக்கான தகவல்களை சேமித்து வைக்கும். உங்களது சிறு வயது தொடக்கம் தற்போது வரையான ஏராளமான நிகழ்வுகள் இங்கு களஞ்சிப்படுத்தபட்டுள்ளன. உணர்வுகள் மன எழுச்சிகள் தாமாகவே Long term memoryக்குள் நுழைந்து விடுகிறது. எனினும் நாம் படிப்பவற்றை Long term memoryக்குள் அனுப்ப முயற்சி எடுக்க வேண்டும்.

ஒவ்வொரு நாளும் மீட்டல் செய்தல், பின் வாரம் ஒரு முறை மீட்டல் செய்தல், பின் மாதம் ஒரு முறை மீட்டல் செய்தல், பின் தவணைக்கு ஒரு முறை மீட்டல் செய் வதன் மூலம் நீங்கள் கற்பவற்றை Long term memory க்குள் அனுப்ப முடியும்.

ஒரு புதிய பாடத்தை கற்ற பின் ஒரு மணித் தியாலத்தின் பின் 50% உம் 9 மணித்தியாலயத்தின் பின் 64% உம் 2 நாட்களின் பின் 72% உம் 3 நாட்களின் பின் 79% உம் மறக்கப்படுவதாக ஆராய்ச்சி மூலம் அறியப்பட்டுள்ளது. மீண்டும் மீண்டும் பாடத்தைப் படித்தால் மறக்கும் அளவு குறையும்.

நீங்கள் ஆசிரியர் வகுப்பில் கற்பிப்பவற்றை அன்றே மீட்டல் செய்வீர்களானால் அது மறக்கப்படும் வீதம் குறையும். பின் வாரம் ஒருமுறை, மாதம் ஒரு முறை, தவணைக்கு ஒரு முறை என மீட்டல் செய்வீர்களானால் அது உங்களின் Long term memory க்குள் கொண்டு செல்லப்படும்.

சாதாரணமாக நாம் ஒவ்வொருவரும் மூளையின் ஆற்றலில் 10 வீதத்தையே பயன் படுத்துகின்றோம். விஞ்ஞானிகள் கூட 13 வீதத்தையே பயன்படுத்துகிறார்கள் என ஆய்வுகள் சுட்டிக் காட்டியுள்ளன.

உங்களில் Long term memory இல் 90% இன்னமும் பயன்படுத்தப்படாமலேயே இருக்கின்றது. எனவே நீங்கள் எவ்வளவு தகவல்களையும் Long term memory க்கு அனுப்பலாம்.

உங்களின் அனேகமானவர்களின் பெரிய பிரச்சனை நீங்கள் கற்பது விரைவில் மறந்து விடுகின்றமை தான். ஆனால் சில மாணவர்களோ தாம் கற்பதை நீண்ட காலம் நினைவில் வைத்திருக்கிறார்கள்.

இதன் இரகசியம் என்ன வென்று தேடும் போது உளவியலாளர்கள் முக்கிய உண்மை ஒன்றை கண்டு உள்ளனர். அது என்ன வென்றால் ஒரு நாளில் கற்பவற்றை அன்றைய தினமே மீட்டல் செய்பவர்களுக்கு அது மனதில் ஆழப்பதிகிறது. அது மறக்கப்படும் வீதமும் குறைகிறது. வெற்றி கண்ட அனேக மாணவர்களின் வெற்றியின் அத்திவாரம் இது தான்.

எனவே பாடங்களை படித்த பின்பு அன்றே மீட்டல் செய்யுங்கள். எப்படியும் 24 மணி நேரத்திற்குள் மீட்டல் செய்து விடுங்கள். சாதாரணதரத்தில் நல்ல பெறுபேறுகள் எடுத்த மாணவர்கள் உயர் தரத்துக்கு வந்ததும் மிகவும் கஸ்ரப்படுகிறார்கள். இதற்கு பிரதான காரணம் என்ன? சாதாரணதரம் வரை மாணவர்கள் தனியார் நிறுவனங்களுக்கு செல்லும் நேரம் குறைவு. எனவே நாளாந்தம் மீட்டல் செய்வார்கள். ஆனால் உயர்தரத்திற்கு வந்தவுடன் ஒவ்வொரு பாடத்திற்கும் 4 இடங்களுக்குச் செல்வார்கள். இதனால் அவர்களுக்கு மீட்டல் செய்ய நேரம் கிடைப்பதில்லை.

படிப்பதற்காக கையாளக்கூடிய மற்றொரு முறையை அமெரிக்க உளவியலாளர் High bee (1977) கூறியுள்ளார். இது SQ3R கற்றல் முறை இதில் 5 படி முறைகள் உள்ளன.

S - Survey - ஆய்வு செய்தல்
Q - Question - வினா எழுப்புதல்
R - Read - வாசித்து விளங்குதல்
R - Recite - சொல்லிப்பார்த்தல்
R - Revise - மீண்டும் மீட்டல் செய்தல்

(தொடரும்)


# இதோ உங்களுக்கு ஜனாதிபதி புஷ் மீது காலணியை வீசுவதற்கு வாய்ப்பு

## புதிய இணையத்தள விளையாட்டுகள் ஆரம்பிப்பு

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஷின் ஈராக்கிய விஜயத்தின் போது அவர் மீது ஊடகவியலாளர் ஒருவர் காலணிகளை வீசித்தாக்கிய பரபரப்பு ஓயும் முன்பே அச் சம்பவத்தை கருப்பொருளாகக் கொண்டு இணையத்தள விளையாட்டுகள் பல உருவாக்கப்பட்டுள்ளன.

‘‘உங்களால் புஷ் மீது காலணியொன்றை வீசமுடியுமா’’ என்ற தலைப்பில் புஷ் விளையாட்டு ஒன்று http://kroma.no/-2008/bushgame என்ற இணையத்தள முகவரியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி இணையத்தள விளையாட்டை விளையாடும் ஒருவர், அதிக தடவைகள் புஷ் மீது காலணியைச் சரியாக இலக்கு வைத்து வீசினால் சட்டென கணனித்திரையில்



‘ஆம்,உங்களால் முடியும்’ என்ற வார்த்தை பளிச்சிடுகிறது.

அதேசமயம் www.soandawe.com என்ற இணையத்தள முகவரியிலும் புஷ் மீது காலணியை குறிபார்த்து வீசும் விளையாட்டு ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

செவ்வாய்க்கிழமை மேற்படி விளையாட்டில் பங்கேற்றவர்களில் 1.4மில்லியன் பேர் புஷ்ஷை சரியாக இலக்கு வைத்து காலணியால் அடித்ததாக மேற்படி இணையத்தளம் தெரிவிக்கிறது.

இந்நிலையில் www.socadawe.com இணையத்தள விளையாட்டை உருவாக்கிய பிரித்தானியாவைச் சேர்ந்த அலெக்ஸ்தியூ, இந்த விளையாட்டில் புஷ்ஷை காலணியால் அடிக்க 30 செக்கன் மட்டுமே கால அவகாசம் வழங்கப்படுவதாகக் கூறினார். (5)

# பாம்பை உயிருடன் சாப்பிடும் சீனர்

சீனாவைச் சேர்ந்தவர் வென் ஷிட் 41 வயதான இவர், கடந்த 10 ஆண்டுகளாக பாம்பை உயிருடன் கடித்து சாப்பிடுகிறார். முதன் முதலாக அவர் பாம்பை சிநேகிதர்களிடம் போட்ட சவாலுக்காக சாப்பிட்டார். சவாலில் வெற்றி பெற்ற தால், அவருக்கு ஒரு பக்கெட் சிகரெட் பரிசாக கிடைத்தது. அன்று முதல் தினமும் பாம்பை உயிருடன் சாப்பிடுவதை வாடிக்கையாக்கி கொண்டுவிட்டார்.

நிருபர்கள் முன்பு, அவர் 2 பாம்புகளை உயிருடன் சாப்பிட்டார். பியர் போத்தலை திறந்து வைத்துக்கொண்டு,கொஞ்சம் பியர் குடிப்பது,ஒரு வாய் பாம்பைக் கடித்து சாப்பிடுவது என்று அவர் நிருபர்களை ஆச்சரியப் படுத்தினார்.

பாம்பை உயிருடன் உண்ணும்போது அது கொஞ்சம் நாறும்,ஆனால் அது சுவையாக இருக்கும் என்று கூறுகிறார். அவர் பாம்பை உயிருடன் சாப்பிடுவதை பார்த்த 2 சீனர்கள் வாந்தி எடுத்தனர்.

‘‘நான் பாம்பை உயிருடன் தின்பதை பார்த்து, என் மகனும் பாம்புகளை உயிருடன் தின்ன ஆரம்பித்திருக்கிறான். இந்த ஆண்டு மட்டும் அவன் 8 பாம்புகளை உண்டான்’’ என்று ஷிட் கூறினார். இதுபற்றி ஒரு டாக்டர் கூறுகையில், அவருக்கு நரம்புக் கோளாறுகள் ஏற்படலாம் என்றும், நோய் தொற்றும் ஏற்படலாம் என்றும் கூறின ார். (5)

# சோமாலிய கடற்கொள்ளையர்களினால் மேலும் இரண்டு கப்பல்கள் கடத்தல்

பல நாட்டு போர்க் கப்பல்களின் கடும் கண்காணிப்பையும் மீறி, ஆபிரிக்கக் கடல் பகுதியில் மேலும் இரண்டு கப்பல்களைக் கடத்தினர் சோமாலிய கடற்கொள்ளையர்கள்.

சவுதியின் சுப்பர் டேங்கர் கப்பல் மற்றும் சொகுசுக் கப்பல் உட்பட 40இற்கும் மேற்பட்ட கப்பல்களை சோமாலிய கடற்கொள்ளையர்கள் இந்த ஆண்டு கடத்தியுள்ளனர். அந்தப் பட்டியலில் துருக்கி மற்றும் சீனக் கப்பல்களும் தற்போது சேர்ந்துள்ளன.

கடற்கொள்ளையர்கள் நிறைந்த ஏடன் வளைகுடா பகுதியில்,தாக்குதல் நடத்துவதற்காக,12 இற்கும் மேற்பட்ட நாடுகள் இணைந்து அமைத்துள்ள சர்வதேசக் கடற்படையில், சீனாவும் இணைகிறது என, அறிவித்த பின்னும் இந்தக் கடத்தல் நடந்துள்ளது. கடற்கொள்ளையர்களின் இந்த அச்சுறுத்தல் குறித்து, சமீபத்தில் ஐ.நா.விலும் விவாதிக்கப் பட்டது. அப்போது, கடற்கொள்ளையர்கள் மீது வான் வழியாகவும் மற்றும் கடல் வழியாகவும் தாக்குதல் நடத்தவும் உலக நாடுகளுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

இந்த எச்சரிக்கை அறிவிப்புகளையும் மீறி, சோமாலிய கொள்ளையர்கள் தங்களின் கைவரிசையைக் காட்டியுள்ளனர். கடற்கொள்ளையர்களின் அட்டூழியம் நிறைந்த ஏடன் கடற்பகுதியில், ஐரோப்பிய ஒன்றியம் கடற்படையினர் ரோந்துப் பணியில் ஈடுபட்டுள்ளனர். அதையும் மீறி இந்த இரு கப்பல்கள் கடத்தப்பட்டுள்ளன. (5)

## உலக தரிசனம்





ஆமதாபாத்தில் பயங்கரவாதத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து நடத்தப்பட்ட மனிதச்சங்கிலியில் கல்லூரி மாணவிகள் கலந்துகொண்டனர்.

# மசகு எண்ணெய் விலை 40 டொலராக குறைந்தது

6 மாதங்களுக்கு முன்பு சர்வதேச சந்தையில் மசகு எண்ணை விலை 140 அமெரிக்க டொலராகஇருந்தது. இதனால் உலகம் முழுவதும் கடும் பாதிப்பை ஏற்படுத்தியது. இந்நிலையில் எண்ணை நிறுவனங்கள் பெரும் நஷ்டத்தை சந்தித்தன. இதை தவிர்க்க பெற்றோல், டீசல் விலை உயர்த்தப் பட்டது. அதன் பின்னர் சர்வதேச அளவில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியால் எண்ணெய் வாங்குவது குறைந்தது. இதனால் எண்ணெய் விலை குறைந்தது.

கடந்த மாதம் 50 டொலருக்கும் குறைவாக இருந்தது. மேலும் எண்ணெய் உற்பத்தியைக் குறைப்பதாக எண்ணெய் வள நாடுகள் கட்டமைப்பு அறிவித்தது. ஆனாலும் அதற்கு பலன் கிடைக்கவில்லை. இதையடுத்து எண்ணெய் வள நாடுகள் நேற்று முன்தினம் எண்ணெய் உற்பத்தியில் ஆண்டுக்கு 22 இலட்சம் பெரல் குறைப்பதாக அறிவித்தது.

ஆனால் இந்த அறிவிப்பு வெளிவந்த அதே நேரத்தில் அவர்கள் நினைத்ததற்கு எதிர்மாறாக எண்ணெய் விலை மேலும் குறைந்து 40 டொலர் ஆனது.

2004ஆம் ஆண்டு எண்ணெய் விலை 40டொலர் அளவிலேயே இருந்தது. இப்போது மறுபடியும் அதே விலைக்கு வந்துள்ளது. (5)

# புஷ் மீது வீசிய பாதணிகளுக்கு 130 கோடி ரூபா கொடுத்து வாங்க சவூதி செல்வந்தர் விருப்பம்

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் மீது வீசி யெறிந்த பாதணிகளை இலங்கை நாணயப்படி ரூபா 130 கோடி கொடுத்து வாங்கத் தயாராக இருப்பதாக சவூதி அரேபிய கோடீஸ்வரர் ஒருவர் கூறியுள்ளார். கடந்த ஞாயிறன்று அமெரிக்க ஜனாதிபதி ஈராக்கிற்கு விஜயம் செய்த போது அங்கு ஊடகவியலாளர் மாநாடொன்றில் பங்கேற்றார்.

இச்சந்தர்ப்பத்தில் ஈராக்கிய ஊடகவியலாளர், ஒருவர் புஷ்சை நோக்கி கடுமையான வார்த்தைகளால் பேசியபடி தனது காலில் அணிந்திருந்த பாதணிகளைக் கழற்றி அவரை நோக்கி வீசினர்.

தொலைக்காட்சி நிறுவனம் ஒன்றின் ஈராக்கிய நாட்டு நிருபரே இவ்வாறு பாதணிகளை புஷ் மீது வீசினார். அதைத் தொடர்ந்து அவர் கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப் பட்டுள்ளார்.

அவரை விடுதலை செய்யுமாறும் அவரே ஈராக்கின் கௌரவத்துகுரிய பிரஜை எனவும் கூறி ஈராக்கின் பல பகுதிகளிலும் ஆர்ப்பாட்டங்கள் நடந்து வருகின்றன. இந்த நிலையிலேயே மேற்படி கோடீஸ்வரர் குறித்த பாதணியை இவ் வளவு பெருந்தொகைப் பணத்தைச் செலுத்தி வாங்க முன் வந்துள்ளதாக சவூதி அரேபியப் பத்திரிகை ஒன்று கூறுகின்றது.

இதே வேளை லிபிய ஜனாதிபதி முகம்மது கடாபியின் மகள் பாதணிகளை வீசிய அந்த வாலிபருக்கு மாவீரன் பட்டம் சூட்டி விருது வழங்கப் போவதாகக் கூறியிருக்கிறார். ஈராக்கில் சிலர் தங்கள் பாதணி மீது அமெரிக்கக் கொடியைப்போர்த்தி அமெரிக்கா மீதான எதிர்ப்பை தெரிவித்து வருகிறார்கள்.

பாதணிகளை வீசிய ஊடகவியலாளரை பொலிஸார் மடக்கிப் பிடித்த போதும் அதன் பிறகு நடந்த பொலிஸ் விசாரணையிலும் அவரது கை எலும்பு முறிந்துள்ளதுடன் முகத்தில் இரத்தக் காயம் ஏற்படும் அளவுக்குத்தாக்கி இருக்கிறார்கள் என்று அவரது சகோதரர் புகார் கூறி இருக்கிறார். இப்போது அவர் பாக்தாத் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார். லெபனான் டி.வி. நிறுவனம் ஒன்று அவருக்குப் புதிய வேலை கொடுக்க முன் வந்துள்ளது.

# சரோஜாதேவி காலத்தில் நடிக்க முடியவில்லையே

## ரஜினிகாந் வருத்தம்



சரோஜாதேவி காலத்தில் ஹீரோவாக நடிக்க முடியாதது வருத்தமளிகிறது என்று நடிகர் ரஜனிகாந் தெரிவித்துள்ளார். கடந்த செவ்வாய்க்கிழமை, நடிகர் ரஜனிகாந் மனைவி லதா நடத்தும் ஆஸ்ரம் மெட்ரிகுலேஷன் மேல் நிலைப் பள்ளி ஆண்டு விழாவில் கலந்து கொண்ட நடிகை சரோஜாதேவிக்கு விருது வழங்கி உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார். அங்கு மேலும் அவர் கூறுகையில்,


சரோஜாதேவி காலத்தில் ஹீரோவாக நடிக்க வேண்டும் என்று எனக்கு ஆசை இருந்தது. அவருடன் நடிக்க முடியாதது எனக்கு மிகுந்த வருத்தம் அளிக்கிறது.

ஒரு வேளை அந்த நேரத்தில் நான் ஹீரோவாக நடித்தால் கூட அப்போது திரையுலக ஜாம்பவான்களாக இருந்த எம்.ஜி.ஆர்., சிவாஜிகணேசன் ஆகியோர் என்னை நெருங்க விட்டிருக்க மாட்டார்கள்.

சரோஜாதேவியின் நடிப்பு எனக்கு மிகவும் பிடிக்கும் என அவர் தெரிவித்தார்.

# இலங்கைக்கு இரண்டு இலட்சம் இராணுவத்தை அனுப்பிய ராஜீவ் சர்வதேச பயங்கரவாதி இல்லையா?

## இயக்குனர் சீமான் ஆவேசப் பேச்சு



(ஈரோடு)

தமிழக மண்ணில் இன்னொரு பிரபாகரன் பிறக்கும் வரை இந்த இனம் மீளாது. ஒட்டு மொத்த தமிழ் இனத்தையே அழிப்பதற்காக அமைதிப்படை என்ற பெயரில் இலங்கைக்கு இரண்டு இலட்சம் பேரை அனுப்பினாரே ராஜீவ் இது சர்வதேச தீவிரவாதம் இல்லையா? என இயக்குனர் சீமான் பேசியுள்ளார்.

சர்ச்சைக்குரிய பேச்சுக்காக சமீபத்தில் கைதான சினிமா இயக்குனர் சீமான், ஈரோட்டில் பேசியது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தமிழ் தேசப் பொதுவுடமைக் கட்சி சார்பில், 'தமிழர் எழுச்சி உரைவீச்சு' என்ற பொதுக் கூட்டத்தில் சினிமா இயக்குனர் சீமான் பேசியதாவது,

ராமேஸ்வரத்தில் பேசியதற்காக என்னை கைது செய்தனர். என்ன பேசினேன் என்று எவனுக்கும் தெரியவில்லை. என்னை எதற்காக கைது செய்கிறீர்கள் என பொலிஸ் அதிகாரியிடம் கேட்ட போது, "நல்லா பேசுனீங்க சேர் எல்லாம் எங்க தலையெழுத்து" என்று அழைத்துச் சென்றார். கைது செய்து உள்ளே வைத்தனர். இதோ இப்போது வெளியே வந்து விட்டேன்.

ஈழ விடுதலை அணைக்க முடியாமல் எரிகிறது. தடை செய்யப்பட்ட இயக்கம் எனக் கூறப்படும் விடுதலைப்புலிகள் பற்றி பேசக் கூடாது என்கிறனர். யாரைக் கேட்டு தடை செய்தீர்கள்? அமைதிப் பேச்சுவார்த்தை நடந்த அந்த நான்கு ஆண்டுகளில், அவசர அவசரமாக விடுதலைப் புலிகள் மீது தடை போட வேண்டிய அவசியம் என்ன? நான் பேச வேண்டும். சொந்த அண்ணனான பிரபாகரனைப் பற்றி பேசுவதைத் தடுக்க என்ன சட்டம் போடுவாய்? என் கனவு, சிந்தனை, உணர்வு அனைத்தும் பிரபாகரனுடன் ஒன்றி விட்டது. அதை ஒன்றும் செய்ய முடியாது.

உள்ளே போட்டால் இன்னும் அதிகமாகப் பேசுவேன். சீமான் பேசுவதை நிறுத்தினான் என்றால், தனி ஈழம் அடைந்திருக்க வேண்டும் அல்லது அவன் இறந்திருக்க வேண்டும். உலகிலேயே பிரபாகரனைப் போன்ற வீரன் இல்லை. அவனை விட்டால் உலகத்தில் வலிமைமிக்க இராணுவத்தை ஏற்படுத்தி விடுவான் என பயப்படுகின்றனர். ராஜீவை விடுதலைப்புலிகள் கொலைசெய்து விட்டனர் என காங்கிரஸ்காரர்கள் பல்லவி பாடுகின்றனர். அவர்கள் தீவிரவாதிகள் என்கின்றனர். ஒட்டு மொத்த தமிழ் இனத்தையே அழிப்பதற்காக அமைதிப்படை என்ற பெயரில் இலங்கைக்கு இரண்டு இலட்சம் பேரை அனுப்பினாரே ராஜீவ் இது சர்வதேச தீவிர வாதம் இல்லையா?

இலங்கையில் போரை நிறுத்தும் வரை யாருக்கும் வாக்கு போடாதீர்கள் வாக்கு கேட்டு வருபவர்களை துரத்தியடியுங்கள். காந்தி இந்திரா ஆகியோர் கொல்லப்பட்டனர். கொலைகாரர்களை என்ன செய்தாய்? பெரியாரின் குச்சி தான் இன்று நிமிர்ந்து துப்பாக்கியாக பிரபாகரன் கையில் உள்ளது. அவன் நமது குலதெய்வம். தவித்த வாய்க்குத் தண்ணீர் தராத ஒரு தேசம் மீது எப்படி நேசம் வரும்? தமிழகத்துக்குத் தண்ணீர் தர, மறுக்கும் கர்நாடகா, கேரளாவை யாராவது கண்டித்தார்களா? 406 தமிழக மீனவர்களை, இலங்கை இராணுவம் கொன்றது. இதை இந்திய தேசம் கண்டித்ததா? இல்லை. நவீன துப்பாக்கி, தொலைநோக்குக் கருவி, தோட்டாக்களை இலங்கை இராணுவத்துக்குத் தரும் இந்தியா தான் தமிழினத் துரோகி.

இந்தியா கண்டுகொள்ளாமல் இருந்தால், இலங்கையை ஒரு கை பார்த்து விடுவான் எங்கள் அண்ணன். சிறையில் நான் இருக்கும் போது, சகோதரனை வெட்டியவன் 'பிக்பொக்கெட்' அடித்தவன் தான் அதிகமாக இருக்கின்றனர். எதிரிகளான, பார்ப்பனன், சிங்களன், கன்னடனை விடுத்து, தனது சகோதரனை வெட்டி விட்டு சிறையில் இருக்கிறான். இது ஒரு இனமா? இந்த மண்ணில் (தமிழகத்தில்) இன்னொரு பிரபாகரன் பிறக்கும் வரை இந்த இனம் மீளாது. இவ்வாறு சீமான் பேசினார்.

### சீமானை கைது செய்ய காங். எம்.எல்.ஏ. கோரிக்கை

இந்தியாவை கொச்சைப்படுத்தியும், விடுதலைப் புலிகளை ஆதரித்தும் ஈரோட்டில் பேசிய சினிமா இயக்குனர் சீமான், தமிழ் தேசபொதுவுடமைக் கட்சி மாநிலப் பொதுச் செயலர் மணியரசன், பெரியார் தி.க. தலைவர் கொளத்தூர் மணி ஆகியோரை தேசியப் பாதுகாப்புச் சட்டத்தில் கைது செய்ய வேண்டும் என ஈரோடு மாவட்ட காங்கிரஸ் தலைவர் பழனிச்சாமி எம்.எல்.ஏ.பொலிஸ்சில் புகார் செய்துள்ளார்.

கடந்த 14 ஆம் திகதி தமிழ்த் தேச பொதுவுடமைக் கட்சி சார்பில், 'தமிழர் எழுச்சி உரைவீச்சு' என்ற தலைப்பில் ஈரோடு திருநகர் காலனியில் பொதுக்கூட்டம் நடந்தது. கூட்டத்தில் சினிமா இயக்குனர் சீமானின் பேச்சு, காங்கிரஸ் தரப்பில் கொதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஈரோடு மாவட்ட காங்கிரஸ் தலைவர் பழனிச்சாமி எம்.எல்.ஏ.டிசம்பர் 15 ஆம் திகதி ஈரோடு டவுன் டி.எஸ்.பி.,தணபாலிடம் புகார் மனு கொடுத்துள்ளார்.

இதுபற்றி பழனிச்சாமி எம்.எல்.ஏ. , கூறியதாவது,

இலங்கைத் தமிழ் மக்களுக்கு ஆதரவு தெரிவிப்பதாகக் கூறிக்கொண்டு, தடை செய்யப்பட்ட பயங்கரவாத இயக்கமான விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு தெரிவித்துப் பேசுகின்றனர். சினிமாவில் படம் இயக்க வாய்ப்பு கிடைக்காததால் சீமான் இதுபோல் பேசுகிறார். தமிழகத்தில் எத்தனை அகதி முகாம்கள் இருக்கின்றன என சீமானுக்கோ, மற்றவர்களுக்கோ தெரியுமா? முகாமில் தங்கியிருப்பவர்கள் நிலை பற்றி தெரியுமா? உணர்வு பூர்வமாக பேசுகிறேன் என்று எது வேண்டுமானாலும் பேசலாமா? இவ்வாறு பழனிச்சாமி கூறினார். (5)




யாழ். பிராந்திய மனித உரிமை ஆணைக்குழுவில் மனித உரிமைகள் தின நிகழ்வு நேற்று அதன் இணைப்பாளர் எஸ்.சிவராஜசிங்கம் தலைமையில் நடைபெற்ற போது யாழ். அரச அதிபர் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

## வன்னியில் இடம் பெயர்ந்த மக்களுக்கு கிடுகுகள் அனுப்பி வைக்க நடவடிக்கை

(வவுனியா)

வன்னியில் இடம் பெயர்ந்த மக்கள் தற்காலிக கொட்டகைகள் அமைப்பதற்கு கட்டுப்பாடற்ற பகுதிக்கு ஒரு இலட்சத்து 50ஆயிரம் கிடுகுகள் அனுப்பி வைக்க நடவடிக்கை எடுத்திருப்பதாக வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பி. எம்.எஸ்.சார்ஸ் தெரிவித்தார்.

இதற்கமைய முதற்கட்டமாக 3 பார் ஊர்திகளில் 50 ஆயிரம் கிடுகுகள் நேற்று அனுப்பி வைக்கப்பட்டதாகஅவர் கூறினார்.

புத்தளத்தில் இருந்து கொண்டு செல்லப்பட்ட கிடுகுகள் வவுனியாமாவட்ட அரசாங்க களஞ்சியத்தில் சோதனைக்கு



உட்படுத்தப்பட்டு வன்னிக்கு அனுப்பி வைக்கப்படவிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் தொடர்ந்து மழை பெய்து கொண்டுஉள்ளபோதிலும் வன்னியில்இடம் பெயர்ந்த மக்களுக்கு வேண்டிய உணவுப் பொருட்கள் மற்றும் ஏனைய தேவைகளையும் சரி செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப் பட்டிருப்பதாக அரசாங்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அதே நேரம் வன்னியில் இருந்து தமது அத்தியாவசிய தேவை நிமிர்த்தம் வவுனியாவுக்கு வந்து கடந்த சில நாட்களாக வன்னி செல்ல முடியாமல் வவுனியாவில் தங்கி இருந்த 200 பேர் நேற்று வவுனியாவில் இருந்து இரண்டு பேரூந்துகளில் ஓமந்தை நோக்கி அனுப்பி வைக்கப்பட்டனர். (ஓ-6)

### மன்னாருக்கு கட்டடப் பொருட்கள் கொண்டு செல்வதற்கான தடை நீக்கம்

(கொழும்பு)

மன்னாருக்குப் கட்டிட வேலைகளுக்குத் தேவைப்படும் பொருட்கள் கொண்டு செல்வதற்கு முன்னர் விதிக்கப்பட்டிருந்த தடைகள் நீக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த பல மாதங்களாக கட்டிட வேலைகளுக்குத் தேவைப்படும் இரும்புக் கம்பிகள் சீமெந்து, கணனிப் பொருட்கள், எரிபொருட்கள் என்பவற்றிற்குக் கட்டுப்பாடும் பாஸ் நடைமுறைகளும் இருந்து வந்தன.

தற்போது இவற்றிற்கான தடைகள் தளர்த்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை, பட்டறை இயந்திர உபகரணங்கள், கண்ணாடி இழைப்படகு திருத்தும் உபகரணங்கள், அலுமினியத் தயாரிப்புகள், மின்கலம், இரும்பு உருளைகள், தாங்கிகள் ஆகிய பொருட்களை மன்னார் நகரிற்குள் கொண்டு வரும் போது இராணுவ அதிகாரியின் அனுமதி பெற வேண்டும் என்ற நியதி இன்னமும் அமுலில் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஓ-6)

# புதிய சதியின் மூலம் ஆட்சியினை கவிழ்ப்பதற்கு எதிர்க்கட்சி முயற்சி

## அரசாங்கம் குற்றச்சாட்டு ; எச்சரிக்கையாக இருப்பதாகவும் தகவல்

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தலைமையிலான அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கு பல சதித்திட்டங்களை மேற்கொண்டு தோல்வியடைந்த எதிர்க்கட்சி, தற்போது புதியதொரு சதியினை முன்னெடுத்து ஆட்சியினை கவிழ்க்க முனைகின்றது.

இது குறித்த தகவல்களை அரசாங்கம் சேகரித்து வருவதுடன் எச்சரிக்கையாகவும் உள்ளது என்று போக்குவரத்து அமைச்சரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கியஸ் தருமான டளஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளினால் மேற்கொள்ளப்படும் விமானத் தாக்குதல்கள், தமிழ் நாட்டில் அரசாங்கத்துக்கு எதிராக மேற்கொள்ளப்படும் ஆர்ப்பாட்டங்களின் போது புலிகளை விட எதிர்க் கட்சிகளே மகிழ்ச்சி ஆரவாரத்தில் திளைக்கின்றன. அரசாங்கம் எப்போதும் எதிரிக்கு பதிலடி வழங்கத் தயாராகவே உள்ளது என்று அவர் கூறினார்.

கொழும்பில் மகாவலி கேந்திர நிலையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறே கூறினார்.

இங்கு அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது,

அரசாங்க சார்பான சுபசெத என்ற ஜோதிடப் பத்திரிரிகையை பயன்படுத்தி ஜனாதிபதிக்கும் அரசதரப்பினருக்கும் எம கண்டம் எனவே, நாட்டின் தலைவர் கொலை செய்யப்படுவார் என தலைப்புச் செய்தி வெளியிடப்பட்டது. இது தொடர்பில் ஆராய்ந்து பார்க்கையில் திட்டமிட்டு வெளியிடப்பட்ட செய்தி என்பது புலனானது.

பின்னர் 2007ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் போது எம்.பிக்களை விலை கொடுத்து வாங்கி அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கு சதி மேற்கொள்ளப்பட்டது.

ஜே.வி.பி. யின் தீர்மானத்தினால் சதி தகர்க்கப்பட்டது. இதன் பின்னர் இந்தியாவுக்குச் சென்று அரசாங்கத்திற்கு எதிரான தகவல்களை வழங்கி விரோதத்தை ஏற்படுத்த முனைந்தார்கள். இதுவும் தோல்வியிலேயே முடிந்தது. ஜனாதிபதி இந்தியாவுடனான இராஜதந்திர நட்புறவை வலுப்படுத்தினார்.

பின்னர் சர்வதேச ரீதியாக இலங்கை அரசாங்கத்திற்கு எதிரான பிரசாரத்தை முன்னெடுத்தனர். ஜி.எஸ்.பி. பிளஸ் வரியை பெற்றுக் கொள்ள அரசியலமைப்பில் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் பிரசாரங்களை மேற்கொண்டார். ஆனால் மூன்று வருடங்கள் சலுகை நீடிக்கப்பட்டது.

பொருளாதாரத்தின் குரல் வளையை நசுக்கி அரசைக் கவிழ்க்கும் முயற்சியும் தோல்வி கண்டது.

எனவே, இன்று மேற்கண்ட செயற்பாடுகள் அனைத்தையும் எரியவிட்டு புதுவிதமான சதித்திட்டத்தை முன்னெடுத்து அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருவதாக தகவல்கள் கிடைத்துள்ளன.

இது தொடர்பில் அரசாங்கம் எச்சரிக்கையாக உள்ளதோடு தகவல்களை சேகரித்து வருகிறது. இதுகுறித்து அமைச்சரவையிலும் ஆராயவுள்ளது.

அரசாங்கத்தை சிறிதாக விமர்சித்து சர்வதேச மன்னிப்புச் சபை அறிக்கை விடுத் தால் அதனை தூக்கிப் பிடிக்கும் எதிர்க்கட்சி என்று புலிகளுக்கு எதிராக அச்சபை விடுத்துள்ள அறிக்கை தொடர்பில் மௌனம் சாதிக்கின்றது.

அரசாங்கம் எப்போதும் எதிரிக்கு பதிலடி வழங்கத் தயாராகவுள்ளது என்றார். (ஓ-5)

# கிளிநொச்சியை கைப்பற்றுவது பற்றி கால எல்லை குறிப்பிட்டு கூற முடியாது

## பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவிப்பு



(கொழும்பு)

செவ்வாய்க்கிழமை நடந்த மோதல்களால் இராணுவத்தினருக்கு இழப்புக்கள் ஏற்பட்டது ஆயினும் கிளிநொச்சியைக் கைப்பற்றுவதற்கான கால எல்லை பற்றி உறுதியாக கூற முடியாதுள்ளது என பிரிகேடியர் உதய நாணயக்காரர் தெரிவித்துள்ளார்.

புதிதாகக் கடைப்பிடிக்கப்படும் இராணுவ உத்தி மூலம் கிளிநொச்சி கைப்பற்றப்பட்டு விடும் எனவும் பிரிகேடியர் குறிப்பிட்டார்.

இதே வேளை கடந்த சில வாரங்களில் கிளிநொச்சிப் பகுதியில் இடம் பெற்ற மோதல்களில் செவ்வாய்கிழமை இராணுவத்தினருக்கு மூன்றாவது தடவையாக பாரிய இழப்புக்கள் ஏற்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ-6)

## தமிழக மக்களால் அனுப்பப்பட்ட

# உணவுப் பொதிகள் உடைத்த நிலையில் கிளிநொச்சி வந்து சேர்ந்துள்ளன

(கொழும்பு)

தமிழக மக்களால் அனுப்பப்பட்ட உணவுப் பொதிகளில் கிளிநொச்சிக்கு வந்தவற்றில் 1,044 பொதிகள் உடைக்கப்பட்ட நிலையிலேயே வந்துள்ளதாக கிளிநொச்சி அரசாங்க அதிபர் நா. வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது, தமிழகத்தால் 80 ஆயிரம் உணவு மற்றும் உடைப்பொதிகள் வழங்கப்பட்டன.

இவை அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கத்தினரால் இந்திய தூதரகத்திடமிருந்து கையேற்கப்பட்டு வன்னிக்கு கொண்டு வரப்பட்டன. இவற்றில் முழுதாக பொதிகள் வந்து சேரவில்லை.

கிளிநொச்சி மாவட்டத்துக்கு 32 ஆயிரத்து 783 உணவுப்பொதிகள் வந்துள் ளன. இவற்றில் 1,044 பொதிகள் உடைந்த நிலையில் தான் தம் மிடம் வந்து சேர்ந்துள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார். (ஓ-6)



வலிகிழக்கு உரும்பிராய் உப அலுவலக உப சபையினால் வெளியிடப்பட்ட *செல்வரதி மலர்* வெளியீட்டின் போது வலி கிழக்குப்பிரதேச சபைச் செயலாளர் த.நடராசா, வடக்குப்பிராந்திய ஆணையாளர் திருமதி பத்மினி சிவலிங்கம், யாழ்ப்பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்த குமார், வலி கிழக்கு நீர்வேலி உப அலுவலகப்பொறுப்பதிகாரி திருமதி பேபிசுலோசனா சுகுமார் ஆகியோர் அழைத்துவரப்படுவதை படத்தில் காணலாம்.


கண்ணீர்க் காணிக்கை

மண்ணகம் 25 ✦ 02 ✦ 1947

விண்ணகம் 16 ✦ 12 ✦ 2008



அமரர் நல்லையா தவகுலசிங்கம்

முன்னாள் சீமெந்துக்கூட்டுத்தாபனம் (இயந்திரப் பராமரிப்புப் பகுதி)
அக்ரோ இயந்திரவியல் உரிமையாளர் (கோண்டாவில்)

அமரர் திரு. நல்லையா தவகுலசிங்கம் அவர்களின் மறைவு கேட்டு அதிர்ச்சியடைந்தோம். அவர்களின் ஆத்மா சாந்தி பெற எமது ஆழ்ந்த அனு தாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பத்து ஆண்டுகள் பழகினாலும் அவரது பண்பையும் அன்பையும் கடமை உணர்வையும் எம்மால் மறக்க முடிய வில்லை.

599, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

உரிமையாளர் கஜனாஸ்

(சி/1859)


# கிழக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்பட்டிருக்கும் திட்டங்கள் இனப்பிரச்சினையை ஆழப்படுத்தாது

## அமெரிக்கத்தூதுவர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றை முன்வைப்பதற்கு முன்னர் கிழக்கு மாகாணத்தில் அர்த்தமுள்ள அபிவிருத்தி ஏற்படுத் தப்பட வேண்டியது அவ சியமானது என அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.

குறிப்பாக கிழக்கு மாகாணத்திலுள்ள மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்த்தப்பட வேண்டும் என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் றொபேர்ட் ஓ.பிளேக் கூறினார்.

கிழக்கு மாகாணத்தில் அமெரிக்காவால் முன்னெடுக்கப்பட்டிருக்கும் திட்டங்கள் இனப்பிரச் சினையை மேலும் ஆழமாக்கும் எனவும், அரசியல் தீர்வின் பின்னரே கிழக்கில் அபிவிருத்தியை ஏற்படுத்த முடியுமெனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் கூறியிருந்தார். இந்தக் கருத்துத் தொடர்பாக பதிலளிக்கும் நோக்கிலேயே அமெரிக்கத் தூதுவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினரின் கருத்துடன் தான் இணங்கவில்லையெனத்தெரிவித்திருக்கும் அமெரிக்கத் தூதுவர், கிழக்கு மாகாண மக்கள் தொழில்வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்வதற்கு ஏதுவான தொழில் நுட்ப பயிற்சிகளை வழங்கவேண்டிய அவசியம் காணப்படுவதாகக் குறிப்பிட்டார்.

மாகாண சபையை ஒதுக்கி விட்டு மத்திய அர சாங்கமும் அமெரிக்க முகவர்களும் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பதாக முன் வைக்கப்பட்ட குற்றச்சாட்டையும் அவர் மறுத்துள்ளார்.

அபிவிருத்திப் பணிகளுக்கான நிதியுதவி நேரடியாக மத்திய அரசாங்கத்துக்கு வழங்கப்படுவதில்லையெனவும் இலங்கையி லுள்ள நிறுவனங்களுக்கு அமெரிக்காவிலிருந்து நேரடியாக நிதியுதவி வழங்கப்பட்டு அதன் ஊடாகவே அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படுவதாகவும் பிளேக் கூறி னார்.

இலங்கையில் வறிய மாகாணங்களில் கிழக்கு மாகாணமும் ஒன்று என்பதை அமெரிக்கா நன்கறிந்திருப்பதாலேயே அங்கு பொருளாதார வாய்ப்புக்களை ஏற்படுத்தி அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்து வருவதாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் றொபேர்ட் ஓ. பிளேக் மேலும் கூறினார். (ஓ-5)

குற்றம் செய்யும் ஒவ்வொருவரும் தன் இலட்சியத்தை அடையாது நெறி தவறியவனே.

– ஔரேலியன் மார்க்கஸ்

வலம்புரி

## எதற்கும் நீதிமன்றத்தை நாடும் அவல நிலையில் இலங்கை

சாதாரண விடயங்களைத் தீர்ப்பதற்கும் உயர் நீதிமன்றத்தை நாடும் நாடாக இலங்கை இருப்பது மிகப் பெரும் துர்ப்பாக்கிய நிலையாகும்.

உயர் நீதிமன்றங்கள் அரச நிர்வாகத்தால் தீர்க்க முடியாத பிரச்சினைகளை தீர்ப்பதற்கான அமைப்புகளாகும்.

ஆனால் இலங்கையில் தற்போது எந்த விடயத்திற்கும் நீதிமன்றுக்குச் சென்று நீதியைப் பெறவேண்டியுள்ளது.

இதற்குப் பலவற்றை உதாரணமாகக் குறிப்பிடலாம்.

ஆசிரியர்களின் சம்பள உயர்வைப் பேசித் தீர்க்க முடியாத கல்வி அமைச்சரும் அரசும் நீதித்துறையை நாடி நிலைமையைச் சமாளித்துக் கொண்டன.

இச்சமாளிப்பு எத்தனை காலத்திற்கு நீடிக்கக் கூடியது. மீண்டும் ஆசிரியர்கள் சுகவீன லீவுப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

இன்னமும் அதற்கொரு தீர்வைப் பெற முடியாமல் அரசு தத்தளிக்கிறது.

இதற்குமேலாக ஐந்தாமாண்டு புலமைப் பரீட்சை வினாத்தாள் தொடர்பில் நீதிமன்றத்தை நாடும் நிலைமை.

இப்போது க.பொ.த (சா/த) பரீட்சையில் கணித பாடமும் நீதிமன்றம் ஏறித்தான் குழப்பத்தை தீர்த்துக் கொள்ளும் போல் தெரிகிறது.

கல்வி சார்ந்த பிரச்சினையை கல்வியமைச்சு, பரீட்சைத் திணைக்களம், கல்வியாளர்கள் எனப் பலர் இருந்தும் அவற்றை நிதானமாக – நியாயமாகத் தீர்த்துக் கொள்ளும் திராணியும், மன நிலையும் இல்லாதவர்களாக இருக்கின்றனர்.

இவை எல்லாவற்றையும் ஒருபுறம் வைத்துவிட்டு தற்போது மக்கள் மத்தியில் பிரபல்யம் பெற்றுள்ள பெற்றோல் விவகாரத்தை எடுத்துக் கொண்டால் ஜனநாயக அரசு யாருக்கானதென்ற கேள்வியை எழுப்பியுள்ளது.

அதாவது பெற்றோலின் விலை உலக சந்தையில் வீழ்ச்சியடையுமாக இருந்தால், உள்நாட்டிலும் அதன் விலையைக் குறைப்பதே நியாயமும், நீதியும் ஆகும்.

பெற்றோலின் விலையை நாளுக்கு நாள் உயர்த்தியபோது, அதன் பெரும் சுமையை மக்கள் தாங்கிக் கொண்டனர்.

உலக சந்தையில் பெற்றோலின் விலை அதிகரித்துவிட்டதெனக் கூறி விலையை உயர்த்திய அரசு, உலக சந்தையில் பெற்றோலின் விலை வீழ்ச்சியடையும்போது அதற்கேற்றவாறு விலையைக் குறைப்பதே முறையானது.

ஆனால் அரசு அதனைச் செய்யத்தவறிய தன் காரணமாக உயர் நீதிமன்றத்தை நாட வேண்டியிருந்தது.

ஒரு லீற்றர் பெற்றோலின் விலையை நூறு ரூபாயாக உயர் நீதிமன்றம் நிர்ணயித்து தீர்ப்பளித்தது. உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பினால் அரசு அதிர்ந்துபோயுள்ளது.

இரவிரவாக அமைச்சரவை கூடியது. முடிவு எதுவுமே இல்லை. ஆக, வருங்காலத்தில் இலங்கையில் அரசு தேவையில்லை என்ற முடிவை மக்கள் எடுத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

நீதிமன்றங்களே செம்மையாக மக்களை வழிப்படுத்தினால் அரசு தேவை வராதல்லவா?

# 17ஆவது திருத்தச் சட்டமூலம் நடைமுறைக்கு வருமா என்பது சந்தேகமான விடயமே

## தமிழ்க் கூட்டமைப்பு எம்.பி. சம்பந்தன் உரை



(கொழும்பு)

குறிப்பிட்ட ஓர் இனத்திற்கு மட்டுமே சகல உரிமைகளும் வழங்கப்பட்டு இருக்கும் துரதிஷ்ட நிலைமையினாலேயே மிக நீண்ட காலமாக யுத்தம் இடம் பெற்று இரத்த ஆறு ஓடிக் கொண்டிருக்கிறது. இந் நிலை முற்றுப்பெறும் வரை 17ஆவது அரசியலமைப்பு திருத்தம் நடைமுறைக்கு வருமா என்பது சந்தேகமே என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற குழுத்தலைவர் ஆர். சம்பந்தன் தெரிவித்தார்.

இலங்கை தேசிய சமாதான பேரவையின் அரசியலமைப்பின் 17ஆவது திருத்தச் சட்ட மூலம் –விமர்சன ரீதியான கட்டுரைத் தொகுப்பு வெளியீட்டு நிகழ்வு லக்ஸ்மன் கதிர்காமர் நிலையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு உரை நிகழ்த்துகையிலேயே சம்பந்தன் எம்.பி. மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், எமது நாட்டில் நல்லாட்சிக்கு பங்களிப்பு வழங்கக்கூடிய பல நிறுவனங்கள், ஆணைக்குழுக்கள் உள்ளன. நாட்டின் நல்லாட்சியை பேணுவதிலும் விழுமியங்களைப் பேணு வதிலும் அவற்றின் பங்களிப்பு இன்றியமையாதவை. எனினும் இவை முறையற்ற வகையில் அரசியல் மயப்பட்டனவாக இருப்ப தாக ஓர் முறைப்பாடு நீண்டகாலமாக இருக்கின்றது.

17ஆவது அரசியலமைப்பு சீர்திருத்தச் சட்ட மூல ஏற் பாடுகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட போது, அதற்கென ஒரு ஆணைக்குழு ஏற்படுத்தப்பட்டது. பாராளுமன்றத்தில் அன்று இச்சட்ட மூலம் சமர்ப்பிக்கப்பட்ட போது தற்போதைய ஜனாதிபதியும் பாராளுமன்ற உறுப் பினராக இருந்துள்ளார். ஆனால் என்ன நடந்தது? அது இன்று வரை அமுல்படுத்தப்படவுமில்லை; செயற்படுத்தப் படவுமில்லை.

குழப்பங்களுடனான நீண்ட கால கறை படிந்த வரலாறு எமது நாட்டில் உள்ளதாலும் தொடர்ந்தும் கசப்பான சம்பவங்கள் இடம்பெற்று வருவதாலும் இந்த 17 ஆவது திருத்தச் சட்ட மூலம் நடைமுறைப்படுத்தப்படுமா என்பது கேள்விக்குறியே.

இந்த திருத்தச் சட்ட மூலத்திலுள்ள ஒவ்வொரு சரத்தும் அமுல்படுத்தப்படுவது உறுதிப்படுத்தப்பட வேண்டும். யாப்பிலுள்ள உறுப்புரைகளை அமுல்படுத்துவதில் தடைகள் இருந்தால் அவற்றையும் கவனத்தில் கொள்ள வேண்டும். எந்த சரத்து அமுல்படுத்தப்படலாம் என ஆராய்ந்து பார்க்கப்பட வேண்டும்.

ஆண்டாண்டு காலமாக எந்த ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றினாலும் எமது தமிழ் பேசும் சமூகம் அடக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட சமூகமாகவே இருந்து வந்துள்ளது. பெரும்பான்மை எனும் குறிப்பிட்ட ஓர் இனத்துக்கு மட்டுமே எமது நாட்டில் சகல உரிமைகளும் வழங்கப்பட்டு இருக்கின்றன. துரதிர்ஷ்ட சூழ்நிலை காரணமாகவே மிக நீண்ட காலமாக இங்கு யுத்தம் இடம்பெற்று இரத்த ஆறு ஓடிக்கொண்டிருக்கிறது.

இந்நிலை முற்றுப்பெறும் வரை 17 ஆவது அரசியல் திருத்தம் நடை முறைக்கு வருமா என்பது சந்தேகமே என்றார். இந்நிகழ்வில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலைய நிறைவேற்றுப் பணிப்பாளர் பாக்கிய சோதி சரவணமுத்து, சிரேஷ்ட சட்டத்தரணி எஸ். ஜி. புஞ்சிஹேவ, இலங்கை தேசிய சமாதானப் பேரவையின் நிறைவேற்று பணிப்பாளர் கலாநிதி ஜெஹான் பெரேரா, அதன் தலைவர் கிங்ஸ்லி ரொட்றிகோ உட்பட மேலும் பலர் கலந்து கொண்டனர். (ஓ–6)

# எதிர்வரும் ஆண்டு மக்கள் போராட்ட ஆண்டாக பிரகடனப்படுத்தப்படும்

## ஜே.வி.பி. தலைவர் சோமவன்ச தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் ஆண்டை மக்கள் போராட்ட ஆண்டாக பிரகடனப்படுத்த தீர்மானித்துள்ளதாக ஜே.வி.பி.யின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளார்.

மௌனம் காத்து வரும் மக்களின் குரல் களை ஓங்கச் செய்யும் ஆண்டாக 2009 ஆம் ஆண்டு அமையும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மாத்தறை நூபே பகுதியில் நடைபெற்ற ஜே.வி.பி. பிராந்திய மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றியபோது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி என்று இரண்டில்லை எனவும், இரண்டு கட்சிகளும் ஒன்றே எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் உள்ள இரண்டு பிரதான சக்திகளில் ஒன்றாக தற்போது ஜே.வி.பி. அவதாரம் எடுத்துள்ளதாக கட்சியின் தலைவர் தெரிவித்துள்ளார்.

இராணுவத்தினர் நாட்டுக்காக அர்ப் பணிப்புடன் போராடி வருவதாகவும், தற்போது இடம் பெறும் யுத்தத்தில் இதுவரையில் சுமார் 2000 பேர் உயிரிழந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

யுத்தம் காரணமாக வாழ்க்கைச் செலவு சுமையை மக்கள் தாங்கிக் கொண்டனர் எனவும், இதனால் நாட்டில் ஊழல் மோசடிகளே அதிகரித்துள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஓ–5)

# வெள்ளி நற்சிந்தனை

## பக்தியின் மொழி தமிழ் 50

'இறைவன் இருக்கிறான்' என்ற நம்பிக்கையோடு வாழும் வாழ்வியலை வகுத்துக்காட்டுவது சமயநெறியாகும். மனிதன் வாழ்க்கையில் எதிர்கொள்ளும் நன்மைகளையும் தீமைகளையும் முன்னே உணரும் ஆற்றல் பெறுவதற்கு அவனுக்குச் சமய உணர்வு இன்றியமையாதது. தன்னுடைய வாழ்க்கையின் செல்நெறியைத் திட்டமிடுவதற்குச் சென்ற காலத்து நிலைகளை அவன் எண்ணிப்பார்க்க வேண்டும். அதன்பின் எதிர்காலத்தைப் பற்றிய செயற்பாடுகளைத் திட்டமிடவேண்டும். முன்னோர் வாழ்வியலையும் தன்னுடைய எதிர்கால வாழ்வியலையும் இணைத்து நிற்கும் சமயத்தைப் பற்றி நன்கு அறிந்திருக்க வேண்டும்.

இவ்வகையில் 'சமயம்' என்ற சொல் 'நேரம்' என்ற பொருள் தராமல் ஒரு 'செல்நெறி' யைக் குறிப்பதாக பயன்பாட்டிலுள்ளது. மனித வாழ்வின் செல்நெறி எத்தகையது என்பதை முன்னோர், தமது முன்னோர் மூலம் நன்குணர்ந்திருந்தனர். அதனால் அவர் வழிபாட்டு நெறியிலே வாழ்வை நடத்தினர். எனவே 'சமயம்' என்னும் செல்நெறி மக்கள் வழிபாட்டினூடாகக் காலங்காலமாக உணரப்பட்டு வந்துள்ளதை அறியமுடிகின்றது.

ஆனால், இத்தகைய மரபான வாழ்வியல் முறை அண்மைக் காலத்தில் விஞ்ஞான தொழில்நுட்ப அறிவின் வளர்ச்சியால் மாற்றமடையத் தொடங்கியுள்ளது. 'இறைவன்' என்ற, மெய்யாக உணர்ந்த மனப்பக்குவ நிலையைப் பொய்யென்று கூறும் நிலை உருவாகிவிட்டது. நம்பிக்கை என்ற உணர்வினால் இறைவன் பற்றிய உணர்வைப் பெற்றவர்கள் சிலரே. அவர்களும் அந்த நம்பிக்கையை மறந்து செயற்பட்ட தன்மையையும் அதனால் ஏற்பட்ட அவலநிலையையும் அடியார் வரலாறு கூறும் பெரியபுராணம் பதிவு செய்து வைத்துள்ளது.

சுந்தர மூர்த்தி நாயனாருடைய வாழ்க்கையில் இத்தகைய அநுபவம் ஏற்பட்டுள்ளது. இறைவழிபாட்டு மரபில் வந்த குடும்பத்திலே பிறந்த அவருடைய மனதிலே இறை நம்பிக்கை குடிகொண்டிருந்தது. ஆனால் பின்னர் கிடைத்த அரசபோக வாழ்க்கை மனிதநிலையில் எதையும் அடைய முடியும் என்ற எண்ணத்தை வலுப்படுத்தியது. அப்போது இறைவனை மறந்து வாழும் நிலை ஏற்பட்டது. அதனால் துன்பங்களை எதிர்கொள்ள நேர்ந்தபோது இறைவன் பற்றிய எண்ணமே மெய்யானது. அதுவே மனத்தைப் பக்குவப்படுத்தி உண்மையை உணர வைப்பது எனபதைச் சுந்தரர் நன்குணர்ந்து கொண்டார். அந்த உண்மை அநுபவத்தைப் பாடல் மூலமாக அனைவரும் உணரவைக்கின்றார்.

"மெய்யனை மெய்யினின்று உணர்வானை மெய்யி
லாதவர் தங்களுக்கெல்லாம்
பொய்யனைப் புரமூன்று எரித்தானைப் புனிதனைப்
புலித்தோலுடையானைச்
செய்யனை வெளிய திருநீற்றில் திகழுமேனியன்
மான் மறி ஏந்தும்
மைகொள் கண்டனை வாழ்கொளி புத்தூர் மாணி
கத்தை மறந்தென் நினைக்கேனே"

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

# ஊழிக்காலப் பேரழிவை உணர்த்தும் கடும் மழை—பெரும் புயல் 'நிஷா' 13

## நந்தாவில் பகுதியில் பெருகிய வெள்ளம்

நந்தாவில் விளைந்தால் நாடு விளையாது என்று சொல்லுமள வுக்கு கொக்குவில் நந்தாவில் பகுதி வெள்ளத்திற்குப் பெயர் போன இடம்.

உரும்பிராய், கோண்டாவில், கொக்குவில் எனப் பல இடங்க ளில் இருந்து வரும் மழை வெள்ளம் நந்தாவில் குளத்தில் சங்கமமாவது வழக்கம்.

நந்தாவில் குளம் நிறைந்தால் அந்தப் பகுதி மக்கள் இடம்பெய ருவது வழமை.

மாரிகாலத்தில் ஒன்றுவிட்ட வருடங்களில் இந்த இடம் பெயர்வை நந்தாவில் பகுதி மக்கள் அனுபவித்துக்கொள்வர். ஆனால் நிஷா புயல் வெள்ளம் நந்தாவில் பகுதியை சமுத்திரமாக்கிவிட்டது. அப்பகுதியைச் சூழவுள்ள மக்களின் வீடுகளை "சமுத்திரம்" முற்றுகை யிட்டதென்றே கூறவேண்டும்.

நந்தாவில் கற்புலத்து மனோன் மணி அம்மன் ஆலயம் கடலுக்குள் அமைந்துள்ள கோயில் போல் காட்சி தந்தது. மூலஸ்தானம் வரை வெள்ளம் புகுந்துகொண்டதால் பூசைவழிபாடுகள் நிறுத்தப்பட்டன. ஆலயத்தின் முன்பாகவுள்ள சனசமூகநிலையத்தின் மீது நிழல் பரப்பி நின்ற அரச மரம் வீழ்ந்ததில் நிலையக் கட்டடம் தகர்ந்தது.

இப்போதும் நந்தாவில் குளத்தின் விரிபரப்பை தாவடி-கே.கே.எஸ். வீதியில் நின்று பார்த்தால் தெரிந்து கொள்ளமுடியும்.

### சண்டிலிப்பாய் வயல்கள் வெள்ளக்காடாகின

சண்டிலிப்பாய் பாலம் வழுக் கையாற்றுடன் தொடர்புடையது. வேகமான வெள்ளம் பாலத்தை மேவிப் பாய அந்தப் பகுதியால் பயணிப்பது பெரும் ஆபத்தாகியது.

அப்பகுதி வயல்கள் எல்லாம் நெற் பயிரை இழந்து வெள்ள வயல்க ளாக மாறின.

**என்.விஜயன்**

வெள்ளம் பாய்ந்தோட அதில் விளையாடி மகிழும் ஆபத்தான விளையாட்டிலும் சில இளைஞர் கள் ஈடுபட்டதைக் காணமுடிந் தது.

ஏற்கனவே கூறியதுபோல படையினரின் காவலரண்கள் உடைந்து விழுந்தன என்பதற் கப்பால் கல்லுண்டாய், நவாலி, சண்டிலிப்பாய் போன்ற இடங்க ளில் படையினர் வெள்ளத்தில் நின்றபடி வீதியோரக் காவலில் ஈடு பட்டனர்.

### காரைநகரில் வெள்ளம்

தனியான உதவி அரசாங்க அதிபர் பிரிவு,தனியான பிரதேச சபை என்ற பெருமையோடு விளங்கும் காரை நகரையும் வெள்ளம் விட்டு வைக்க வில்லை.

காரைநகர் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்தவர்கள் முழுமையாக மீளக்குடியேறாத நிலையில் கவனிப் பாரற்ற மரங்களை நிஷா புயல் முறித்து வீழ்த்தி துவம்சம் செய்தது. காரைநகரில் உள்ள, யாழ்ப்பாண தமிழர்களின் கூட்டுக்குடும்ப கலா சாரத்தின் அடையாளமாகக் கொள்ளக் கூடிய நாற்சார் வீடுகளில் மரங்கள் வீழ்ந்ததினால் ஏற்கனவே நலிவுற்றிருந்த அந்த வீடுகள் தங்கள் முகவரியைத் தொலைக்கும் பரிதாபத்திற்கு ஆளாகிப் போயுள் ளன.

காரைநகரில் அமைந்துள்ள ஒவ்வொரு கோயில்களிலும் இருக் கக் கூடிய சிறப்பம்சம் தலவிருட் சமாகும்.

எந்த ஆலயத்தைப் பார்த்தாலும் அதன் சுற்றுப்புறம் எங்கும் ஆலமர மும்,அரசமரமும்,வேப்பமரமும் நிழல் பரப்பி ஆலயச் சூழலுக்கு அழகு சேர்க்கும் அந்த அழகில் பொறாமை கொண்ட 'நிஷா' அவற்றைத் தன் கோரப்பிடியால் முறித்து நிலத்தில் வீழ்த்தியது.

இதனால் சில ஆலயங்கள் சேத முற்றன.

ஈழத்துச் சிதம்பரம் எனப் போற்றப்படும் காரைநகர் சிவன் கோவிலுக்கு செல்லும் பக்தர்கள் பல மைல் தூரம் வெள்ளத்தைத் தாண்டிச் செல்ல வேண்டிய நிலைக்கு ஆளானார்கள்.

சிவன் கோவிலுக்கு அண்மித்திருந்த கடலும் வெள்ளப் பெருக்கிற்கு பேருதவி செய்திருந்தது.

(திங்கள் வளரும்)



நந்தாவில் அம்மன் கோவில்
படம்:- சுஜந்தன்




படம்:- கோபி

### வாசகர்கள் வழங்கிய படங்கள்...



படம்:- சுஜந்தன்



படம்:- கோபி

# ஜோன்ஸனின் புயல் வேகத்தில் துவண்டது தென்னாபிரிக்க அணி



(பேர்த்)

ஜோன்ஸனின் புயல் வேகம் 7 விக்கெட்டுக்களை சாய்க்க தென்னாபிரிக்க அணி அதன் முதலாவது இன்னிங்ஸில் 243 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 8 விக்கெட்டுக்களையிழந்து தடுமாறுகின்றது.

முன்னதாக முதலாவது இன்னிங்ஸில் அவுஸ்திரேலிய அணி 375 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணி 3 டெஸ்ட்,2 இருபது-20 மற்றும் 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலாவது டெஸ்ட் நேற்று முன்தினம் பேர்த்தில் ஆரம்பமானது. இப்போட்டியில் நாணயசுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி நேற்று முன்தினம் முதல்நாள் ஆட்ட நேர முடிபில் 9 விக்கெட்டுக்களை 343 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இந்நிலையில் இரண்டாம் நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி மேலதிகமாக 34 ஓட்டங்களை எடுத்து அதன் முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 375 ஓட்டங்களை எடுத்தது.

இதில் ஹடிச் 83 ஓட்டங்களையும் மைக்கெல் கிளார்க் 62,சைமண்ட்ஸ் 57 ஓட்டங்களையும் மற்றும் கிரஜ்ஜா ஆட்டமிழக்காமல் 30 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் நிற்னி 4 விக்கெட்டுக்களையும் ஸ்ரையன்,மோர்கல் மற்றும் ஹரிஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாட களமிறங்கிய தென்னாபிரிக்க அணி 16 ஓட்டங்களை மாத்திரமெடுத்த நிலையில் முதலாவது விக்கெட்டுக்காக மக்கன்சி 2 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அடுத்து இரண்டாவது விக்கெட்டுக்காக இணைந்த அணித்தலைவர் சிமித்-அம்லா ஜோடி சிறப்பாக ஆடி நம்பிக்கை அளித்தனர்.

இந்த ஜோடி இணைப்பாட்டமாக 90 ஓட்டங்களை எடுத்த போது அம்லா 47 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அடுத்து கலிஸ் களமிறங்க மறுமுனையில் சிறப்பாக துடுப்பெடுத்தாடிய அணித்தலைவர் சிமித் 48 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க தென்னாபிரிக்க அணி 110 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையிழந்தது.

இந்நிலையில் 4ஆவது விக்கெட்டுக்காக இணைந்த கலிஸ்-டி வில்லியர்ஸ் ஜோடி பொறுப்புடன் ஆடி விக்கெட் சரிவிலிருந்து தென்னாபிக்க அணியை மீட்டது.

இருவரும் பொறுப்புடன் ஆடி அடுத்தடுத்து தமது அரைச்சதங்களைக்கடக்க தென்னாபிரிக்க அணி 200 ஓட்டங்களை கடந்தது. எனினும் டி வில்லியர்ஸ் 63 ஓட்டங்களை எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார். அடுத்து டுமினி களமிறங்க மறுமுனையில் கலிஸ் 63 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து டுமினி 01, மோர்கல் 01 ஓட்டங்களுடனும் கலிஸ் ஓட்டமெதனையும் எடுக்காமலும் அடுத்தடுத்து ஆட்டமிழக்க தென்னாபிரிக்க அணி 241 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து 8 விக்கெட்டுக்களையிழந்தது.

அடுத்து 10ஆவது விக்கெட்டுக்காக பௌச்சருடன் இணைந்த ஸ்ரையன் நிதானமாகத் துடுப்பெடுத்தாட நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டநேர முடிபில் தென்னாபிரிக்க அணி அதன் முதலாவது இனிங்ஸில் 8 விக்கெட்டுக்களையிழந்து 243 ஓட்டங்களை எடுத்திருந்தது. இதில் பௌச்சர் 02,ஸ்ரையன் 01 ஓட்டத்தையும் எடுத்து களத்தில் இருந்தனர். பந்து வீச்சில் ஜோன்ஸன் 7விக்கெட்டுக்களையும் கிரஜ்ஜா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். மூன்றாம்நாள் ஆட்டம் இன்றாகும்.

# இரண்டாவது டெஸ்ட் இன்று ஆரம்பம்

## இந்திய அணியை இங்கிலாந்து பழிவாங்குமா?



பயிற்சியில் இந்திய அணி வீரர்கள்



பாதுகாப்பு பணியில் பொலிஸார்

(சண்டிகார்)

இந்தியா,இங்கிலாந்து அணிகள் மோதும் இரண்டாவது டெஸ்ட் போட்டி இன்று மொகாலியில் ஆரம்பமாகிறது. இரு அணி வீரர்களுக்கும் கொமாண்டோ பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது.

மும்பை தாக்குதலை தொடர்ந்து இங்கிலாந்து அணி ஒருநாள் தொடரை ரத்து செய்துவிட்டு நாடு திரும்பியது. பின்னர் பாதுகாப்பு ஏற்பாடுகள் திருப்தியாக இருந்ததால் மீண்டும் இந்தியா வந்தது. சென்னையில் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் முதல் டெஸ்டில் இந்தியா வரலாற்று சிறப்பு மிக்க வெற்றியை பெற்றது. இந்நிலையில் இரண்டாவது டெஸ்ட் இன்று மொகாலியில் நடக்கவுள்ளது. இப்போட்டியில் வெற்றி பெற்று தொடரை கைப்பற்ற தோனி தலைமையிலான இந்திய அணி காத்திருக்கிறது. இங்கிலாந்தை பொறுத்தவரை இக்கட்டான நிலையில் உள்ளது.

**வீரர்கள் ஷொப்பிங்**

இரு அணி வீரர்களும் நேற்று முன் தினம் பஞ்சாப் கிரிக்கெட் சங்க மைதானத்தில் தீவிர பயிற்சியில் ஈடுபட்டனர். இங்கிலாந்து வீரர்கள் பயிற்சி முடித்தபின்னர் ஷொப்பிங் சென்றனர். மைதானம் மற்றும் வீரர்கள் தங்கியுள்ள தாஜ் ஹோட்டலில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து சண்டிகார் பொலிஸ் உயர் அதிகாரி டூன் கூறியது, தாஜ் ஹோட்டலில் 300 பாதுகாப்புப்படையினர். பணியில் ஈடுபடுத்தப்பட்டு இருக்கிறார்கள். கிட்டத்தட்ட ஆயிரம் பொலிஸார் ஹோட்டலில் இருந்து மைதானம் செல்லும் வழிவரையிலும் பணியில் அமர்த்தப்பட்டு உள்ளனர். பாதுகாப்பில் குறைபாடு ஏற்பட்டது என்ற அவப்பெயரை தடுக்கும் வகையில் திட்டமிட்டு செயல்பட்டு வருகிறோம். வீரர்கள் தங்கியுள்ள சண்டிகார் தாஜ் ஹோட்டலின் அனைத்து தளங்களிலும் கொமாண்டோ படையினர் ஆக்கிரமிப்பு செய்து தீவிர கண்காணிப்பு பணியில் இருந்து வருகின்றனர். ஹோட்டலில் இருந்து மைதானத்துக்கு செல்லும் போது ஏற்படும் பிரச்சினைகளை தவிர்க்க வழக்கமான வழிகளில் இருந்து புதிய வழியில் வீரர்கள் அழைத்துச் செல்லப்படுவர். இவ்வாறு அவர் கூறினார்.

**வழிவிடுமா இயற்கை?**

மொகாலியில் 19ஆம் மற்றும் 20ஆம் திகதிகளில் இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்பு இருப்பதாகவும் மழை இல்லாத நேரங்களில் வானம் மேக மூட்டத்துடன் காணப்படும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்து இருக்கிறது. இதனால் போட்டி முழுமையாக நடப்பது கேள்விக்குறியாகவுள்ளது.

**ஒளிவெள்ளத்தில்**

மொகாலி டெஸ்டில் வெளிச்சமின்மையை போக்க விளக்குகள் பயன்படுத்தப்படுமா? என்ற கேள்வி குறித்து பி.சி.சி.ஐ. பொருளாளர் பாண்டோவ் கூறுகையில்; வழக்கமாக மொகாலியில் குளிர்காலத்தில் குறிப்பிட்ட நேரத்திற்கு அரை மணி நேரம் முன்பாகவே போட்டிகள் ஆரம்பமாகும். இது மழைக்காலம் என்பதால் பனிப்பொழிவு, மேகமூட்டத்தால் வெளிச்சக்குறைவு ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. இது துடுப்பாட்ட வீரர்களுக்கு சிக்கலாக அமையும். 22ஆம் திகதி பகல் பொழுது குறுகியதாக இருக்கும் இதனால் பந்துவீச்சு செய்யும் அணி 90 ஓவர்கள் பந்துவீசுவது கடினம். இரு அணியினரும் சம்மதித்தால் ஒளி வெள்ளத்தில் போட்டி நடத்தப்படும் என்றார்.

**பதிலடி கொடுப்போம்**

மொகாலி டெஸ்டில் இங்கிலாந்து அணி பதிலடி கொடுக்கும் என அந்நாட்டு முன்னாள் அணித்தலைவர் வோன் தெரிவித்துள்ளார். இவர் கூறுகையில், சென்னை டெஸ்ட் தோல்வியிலிருந்து இங்கிலாந்து அணி விரைவில் மீண்டுவரவேண்டும் இந்தியாவிலிருந்து இங்கிலாந்துக்கும் பின்னர் அபுதாபி வழியாக இந்தியா திரும்பியது என வீரர்கள் அதிக தூரம் பயணம் செய்துவிட்டனர். பயணக்களைப்பு இவர்களுக்கு மன சோர்வை ஏற்படுத்திருக்கலாம். இதிலிருந்து விரைவில் மீள இங்கிலாந்து வீரர்கள் கடுமையாக பயிற்சி செய்ய வேண்டும். மொகாலியில் முழுதிறமையையும் வெளிப்படுத்தி பதிலடி கொடுப்பார்கள் என்றார்.

சென்னை டெஸ்டில் விளையாடிய இந்திய அணியே மொகாலி டெஸ்டிலும் ஆடும். இங்கிலாந்து அணியை பொறுத்தவரை சில மாற்றங்கள் இருக்கலாம் என்று கருதப்படுகிறது. சிறந்த துடுப்பாட்ட வரிசையை கொண்டுள்ள அந்த அணி மிகவும் மெதுவாக ஆடுவது பல வீனத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்திய அணி தொடர்ந்து வெற்றியை பெற போராடும் அதே நேரத்தில் இங்கிலாந்து பதிலடி கொடுக்கும் வகையில் விளையாடும் இதனால் சென்னை டெஸ்ட் போலவே இப்போட்டியும் பரபரப்பாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**டிராவிட்டுக்கு கடைசி வாய்ப்பு**

மூத்ததுடுப்பாட்ட வீரரான டிராவிட் தொடர்ந்து நெருக்கடியில் உள்ளார். இன்றைய டெஸ்ட் அவரது தலைவிதியை நிர்ணயிக்கும் கடைசி வாய்ப்பாக இந்த டெஸ்ட் இருக்கும்.

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான 3 டெஸ்டில் சொதப்பிய அவர் இங்கிலாந்துக்கு எதிரான சென்னை டெஸ்டிலும் மொத்தம் 7 ஓட்டங்களை மட்டுமே எடுத்தார். அவரது துடுப்பாட்டவரிசை மாற்றம் செய்யப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 3 ஆவது வரிசையில் ஆடும் அவரை 5ஆவது வீரராக களம் இறங்கலாமா என்று அணி நிர்வாகம் யோசித்து வருகிறது. 5ஆவது வீரராக வரும் லக்ஸ்மன் 3ஆவது வீரராக இறங்கலாம்.

**99ஆவது முறையாக மோதல்**

இரு அணிகளும் இன்று மோதுவது 99 ஆவது டெஸ்ட் ஆகும். இதுவரை நடந்த 98 போட்டியில் இந்தியா 19 டெஸ்டிலும் இங்கிலாந்து 34 டெஸ்டிலும் வெற்றி பெற்றன. 45 டெஸ்ட் சமனிலையானது.

தோனி தலைமையில் இந்திய அணி 4 வெற்றியை பெற்றுள்ளது. 5ஆவது வெற்றியை மொகாலியில் ருசிப்பாரா? என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

(5)

# பாகிஸ்தான் பயணத்திற்கு இந்திய அணிக்குத் தடை

(புதுடில்லி)

பாகிஸ்தானுக்கு இந்திய அணி அடுத்த மாதம் சுற்றுப் பயணம் மேற்கொள்ள இருந்தது. பாகிஸ்தானுடன் இந்திய கிரிக்கெட் அணி 3 டெஸ்ட் போட்டிகள்,5 ஒருநாள் போட்டிகள் மற்றும் ஒரு இருபது-20 போட்டியிலும் பங்கேற்பதாக இருந்தது. எனினும் மும்பை தாக்குதல் எதிரொலியாக இந்திய கிரிக்கெட் அணியின் பாகிஸ்தான் பயணம் தவிர்க்கப்பட வேண்டும் என பல தரப்பிலிருந்தும் கோரப்பட்டது. இந்நிலையில் இந்திய அணியின் பாகிஸ்தான் பயணத்தை ரத்துச் செய்ய வேண்டும் என பி.சி.சி.ஐ.க்கு மத்திய அரசு வலியுறுத்தியுள்ளது. இதை பி.சி.சி.ஐ. அதிகாரி தெரிவித்துள்ளார்.

இந்தியா,கிரிக்கெட் பயணத்தை ரத்துச் செய்துள்ளதன் மூலம் பாகிஸ்தான் கிரிக்கெட் சபைக்கு பலத்த நஷ்டம் ஏற்படும். 2004ஆம் ஆண்டு இந்திய கிரிக்கெட் அணி பாகிஸ்தானில் நடந்த கிரிக்கெட் போட்டியில் கலந்து கொண்ட போது,பாகிஸ்தான் கிரிக்கெட் சபை 20 மில்லியன் டொலர் வரை சம்பாதித்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்போது இந்திய அணி பாகிஸ்தான் பயணத்தை ரத்துச் செய்திருப்பது பாகிஸ்தான் கிரிக்கெட் சபைக்கு பலத்த அடியாக விழுந்துள்ளது. பாகிஸ்தான் கிரிக்கெட் சபை இந்தியா-பாகிஸ்தான் கிரிக்கெட் போட்டியை ஒளிபரப்புவதற்காக மட்டும் டுபாய் தொலைக்காட்சி நிறுவனமான ரென் ஸ்போர்ட்சிடம் 140.5 மில்லியன் டொலர்களுக்கு ஒப்பந்தம் செய்திருந்தது குறிப்பிடத்தக்கது.

தற்போது பயணம் ரத்துச் செய்யப்பட்டுள்ளதால் கோடிக்கணக்கான ரூபாய் நஷ்டத்திற்கு பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தள்ளப்பட்டுள்ளது. இது ஒரு புறம் இருக்க இந்திய கிரிக்கெட் அணி வருமா வராதா என்ற சந்தேகத்திலேயே சில காலமாகவே பாகிஸ்தான் கிரிக்கெட் சபை,இலங்கை அணியை பாகிஸ்தானுக்கு வந்து விளையாடும்படி கேட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(5)

# நீதிமன்றத் தீர்ப்புக்கு மாறாக அமைச்சரவை முடிபெடுக்க இயலாது

## ஐ.தே.க. தெரிவிப்பு

(கொழும்பு)

பெற்றோலின் விலையை 100 ருபாயாகக் குறைக்குமாறு உயர்நீதிமன்றம் வழங்கியிருக்கும் தீர்ப்புக்கு மாறாக அமைச்சரவையால் எந்தமுடிவையும் எடுக்க முடியாது என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

உயர்நீதிமன்றத் தீர்ப்புக்கு அமைய பெற்றோலின் விலையை 100 ரூபாயாகக் குறைப்பதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என நேற்று கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியல்ல கோரிக்கை விடுத்தார்.

பெற்றோல் விலையை குறைக்குமாறு நீதிமன்றம் வழங்கியிருக்கும் தீர்ப்பானது மக்களின் தீர்ப்பு. மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் நாடாளுமன்றத்தில் இணங்கிக் கொள்வதே சட்டமாக்கப்படுகின்றது. எனவே தற்போது வழங்கப்பட்டிருக்கும் தீர்ப்பு மக்களின் ஆணை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எரிபொருளின் விலையைக் குறைக்க வேண்டிய தேவை அமைச்சர்களுக்கோ ; நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கோ இல்லை. அவர்கள் அரசாங்கத்திடம் இருந்து பெறும் பெற்றோலையே பயன் படுத்துவதாகவும் ஆனால் மக்கள் அவ்வாறு இல்லை என்பதால் அவர்கள் பாதுகாக்கப்படவேண்டும் எனவும் கிரியல்ல கூறினார்.

உலக சந்தையில் எரிபொருளின் விலைகள் குறைவடைந்த போதும் இலங்கையில் எரிபொருட்கள் குறைக்கப்படாமையால் பெற்றோலின் விலையைக் குறைக்க உயர்நீதிமன்றத்தை நாடவேண்டி ஏற்பட்டதாகக் குறிப்பிட்ட அவர் ஹெச்ஜிங் ஒப்பந்தத்தின் மூலம் இலங்கைக்கு 400 மில்லியன் அமெரிக்க டொலர் நட்டம் ஏற்பட்டதாக கூறினார்.

இந்த நட்டம் அரசாங்கத்தின் மோசமான நிர்வாகத்தையே எடுத்துக்காட்டுகிறது என கிரியல்ல சுட்டிக்காட்டினார். பெற்றோலின் விலை தொடர்பாக நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை மாற்றும் அதிகாரம் அமைச்சரவைக்கு இல்லை என தெரிவித்த ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லஷ்மன் கிரியல்ல, நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்காக நன்றி தெரிவிப்பதாகவும் கூறினார்.

நீதிமன்றத் தீர்ப்பை நடைமுறைப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கின்றதா என்பது பற்றி தாம் உன்னிப்பாக அவதானித்து வருவதுடன் மக்கள் பாதிக்கப்பட்டால் அதற்கு எதிராகப் போராடத் தயாராக இருப்பதாக அவர் தெரிவித்தார். (ச-5)

# ஒரு இலட்சத்து 70ஆயிரம் பேருடன் இராணுவம் வலுவான நிலையில்!

## இராணுவத் தளபதி தெரிவிப்பு

இலங்கை இராணுவம் சுமார் ஒரு இலட்சத்து 70ஆயிரம் படைவீரர்களுடன் மிகவும் வலுவான நிலையில் இருப்பதாக இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

தாம் இராணுவத் தளபதியாக பதவியேற்ற போது ஒரு இலட்சத்து 16 ஆயிரம் படைவீரர்களே இருந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த எண்ணிக்கையை ஒரு இலட்சத்து 70ஆயிரமாக உயர்த்தி புதிதாக 50 படையணிகளை உருவாக்கி இராணுவத்தை பலம் மிக்க ஓர் படையாக மாற்றிமைத்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இன்னமும் 2,500 தமிழீழ விடுதலைப் புலிப் போராளிகளே எஞ்சியிருப்பதாக இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளினால் பொருத்தப்பட்ட கண்ணி வெடிகளில் சிக்கி 500க்கும் மேற்பட்ட படைவீரர்கள் பாதங்களை இழந்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார் என திவயின நாளேடு செய்தி வெளியிட்டுள்ளது. (ச-5)

### பெற்றோலின்...

தீர்ப்பு குறித்த அமைச்சரவைக் கூட்டம் நேற்று ஜனாதிபதி தலைமையில் நடைபெற்றதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்தக் கூட்டம் நேற்று இரவு 8 மணிவரை நடைபெற்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்போது வெளிநாடு சென்றுள்ள 8 பேர் தவிர்ந்த அனைத்து அமைச்சர்களும் கலந்து கொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

### புதிய சட்டமா...

தில் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்கவும் கலந்து கொண்டார்.

உயர் நீதிமன்றத்தில் நிருவாக சட்டம், வர்த்தக சட்டம், அடிப்படை உரிமைகள், கைத்தொழில் சட்டங்கள் மற்றும் குற்றவியல் சட்டம் போன்ற துறைகளில் சட்டத்தரணியாக கடமையாற்றியுள்ள மொஹான் பீரிஸ் பல்வேறு சர்வதேச மாநாடுகளில் பங்குபற்றியுள்ளதுடன் பல சர்வதேச நிறுவனங்கள் ஒழுங்கு செய்த கூட்டங்களிலும் இலங்கை சார்பாகக் கலந்து கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-2,4,5)

### சர்வகட்சிக்...

வரும் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான யோசனைத் திட்டங்களைத் தயாரிக்கும் நோக்கில் கடந்த 2006ஆம் ஆண்டு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவால் சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு உருவாக்கப்பட்டது.

இரண்டு வருடங்கள் கூடி ஆராய்ந்த பின்னர் இனப்பிரச்சினைக்கு அதிகாரங்களை பகிர்வது என்ற தீர்மானத்துக்கு சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு முன்வந்திருப்பதாக அதன் தலைவர் அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண அண்மையில் கூறியிருந்தார்.

எதிர்வரும் 29ஆம் திகதி நடைபெறவிருக்கும். சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் 100-வது அமர்வே இறுதி அமர்வாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ச-5)

### இராணுவத்...

விடுதலைப் புலிகளின் சடலம் ஒன்றைத் தாங்கள் செஞ்சிலுவைக் குழுவினரிடம் நேற்று மாலை கையளித்திருப்பதாகவும், மேலும் 15 விடுதலைப் புலிகளின் சடலங்கள் கையளிக்கப்படுவதற்காக வவுனியா வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருப்பதாகவும் இராணுவத் தலைமையகம் தகவல் வெளியிட்டிருக்கின்றது. (ச-5)


வாருங்கள்...

இலவசம்!!!

விடுதலைப் பெருவிழா

கவலை, கண்ணீர், தீராத வியாதி, பிசாசின்பிடி, பில்லி சூனியக்கட்டு, பரம்பரை சாபங்கள் ஆகியவற்றிலிருந்து

இயேசு விடுதலை கொடுக்கிறார்....

இடம் - நாற்சதுர சுவிசேஷ சபை, பருத்தித்துறை வீதி, முத்திரைச் சந்தி, நல்லூர்.

நேரம்- வெள்ளி பிற்பகல் 2.00மணிக்கும்,சனி,ஞாயிறு 3.00 மணிக்கும்.

காலம்: மார்கழி 19ம், 20ம், 21ம் திகதிகளில். (வெள்ளி, சனி மற்றும் ஞாயிறு தினங்களில்)

19ம் திகதி (வெள்ளி) பல கலை நிகழ்ச்சிகள் உள்ளடங்கிய ஒளி விழா நிகழ்வு நடைபெறும்.

"வருத்தப்பட்டுப்பாரம் சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்: நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" (மத் .11:28)

இலங்கை நாற்சதுர சுவிசேஷ சபை, பருத்தித்துறை வீதி, முத்திரைச்சந்தி, நல்லூர்.

(2013)


# கொள்ளுப்பிட்டியில் தீ விபத்து

கொள்ளுப்பிட்டி பகுதியில் மாடிக்கட்டடம் ஒன்றில் ஏற்பட்ட தீ கட்டுப்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டதாக தீயணைப்பு பகுதிச் சேவையினர் தெரிவித்தனர். அந்தக் கட்டடத்துக்குள் சிக்கியிருந்த சுமார் 400 பேர் மீட்கப்பட்டதாக சம்பவ இடத்தில் இருந்த பொலிஸ் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

தீ ஏற்பட்ட கட்டடத்தின் மேல் மாடிகளிலிருந்த நூற்றுக்கும் மேற்பட்டோர் தீயணைப்பு வாகனத்தின் உதவியுடன் காப்பாற்றப்பட்டனர். (ச-3)

# கைக்குண்டுத் தாக்குதல் படையினர் இருவர் பலி

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள வாகரை பகுதியில் படையினர் மீது தமிழீழ விடுதலைப்புலிகள் நடத்திய கைக்குண்டுத் தாக்குதலில் படைத்தரப்பைச் சேர்ந்த இருவர் கொல்லப்பட்டுள்ளதுடன் மேலும் இருவர் காயமடைந்துள்ளனர்.

வாகரை பகுதியில் உள்ள தட்டுமுனையில் நேற்று முன்தினம் புதன்கிழமை படையினரின் காவலரண் மீது விடுதலைப் புலிகள் கைக்குண்டுத் தாக்குதல் நடத்தினர். இதில் படைத்தரப்பைச் சேர்ந்த இருவர் கொல்லப்பட்டனர். மேலும் இருவர் காயமடைந்தனர் என விடுதலைப் புலிகள் மேலும் தெரிவித்தனர். (ச-5)

# சிறந்த மனிதராக ஒபாமா தேர்வு!

(வாஷிங்டன்)

அமெரிக்காவிலிருந்து வெளியாகும் புகழ் பெற்ற ரைம் வார இதழ் ஆண்டு தோறும் சிறந்த மனிதரைத் தேர்வு செய்து தனது முகப்பு பக்கத்தில் வெளியிட்டு வருகிறது.

ரைம் பத்திரிகையின், ஆண்டின் சிறந்த மனிதராக தேர்ந்தெடுக்கப்படுவது மிகப் பெரிய கௌரவமாக கருதப்படுகின்றது. இதற்கு முன்னர் மகாத்மா காந்தி உள்ளிட்ட மகத்தான தலைவர்கள் இந்த கௌரவத்திற்காக தேர்வு செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

அந்த வகையில் 2008 ஆம் ஆண்டின் சிறந்த மனிதர் தேர்வுக்கான பரிசீலனையில் முன்னாள் அதிபர் கிளிண்டனின் மனைவி ஹிலாரி, ஒலிம்பிக் சாதனையாளர் மைக்கேல் பெல்ப்ஸ், பிரான்ஸ் அதிபர் சர்கோசி உள்ளிட்ட பலரது பெயர்கள் இருந்தன.

அமெரிக்க அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பராக் ஒபாமா ஆண்டின் சிறந்த மனிதராக தேர்வு செய்யப்பட்டுள்ளார். (ச-5)

# இலங்கைப் பிரச்சினைக்கு இந்து அமைப்புகள் குரல்

(புதுடில்லி)

இந்தியாவில் பெரும்பான்மை இந்துக்களின் செல்வாக்கையும் அபிமானத்தையும் பெற்றிருக்கும் ஆர்.எஸ்.எஸ். மற்றும் விஸ்வ இந்து பரிஷத் ஆகிய அமைப்புகள் இலங்கைப் பிரச்சினைக்கு குரல் கொடுத்திருக்கின்றன.

இலங்கையிலுள்ள தமிழர்களில் அதிகமானவர்கள் இந்துக்கள் என்பது தெரியும். அவர்களைக் கைவிட மாட்டோம் என்று விஸ்வ இந்து பரிஷத் தலைவர் அசோக் சிங்வால் ,யாழ்ப்பாண மாவட்ட தமிழ்க் கூட்டமைப்பு எம்.பி.,எம்.கே.சிவாஜிலிங்கத்திடம் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் போரினால் இந்து ஆலயங்கள் பாதிக்கப்படுகின்றன. இந்து ஆலயங்கள் பலவற்றை இலங்கை இராணுவம் கைப்பற்றி வைத்துள்ளது. இதனால் இந்து மதம் பாதிப்புக்குள்ளாகின்றது. இந்துக்களும் இந்து மதமும் துன்பப்பட நாங்கள் இடம் கொடுக்க மாட்டோம் என்று ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் பொதுச் செயலாளர் சுரேஷ் ஜோஷி,சிவாஜிலிங்கத்திடம் தெரிவித்துள்ளார். (ச-5)

### வன்னிப் பகுதியில் ...

வன்னிப்பெரு நிலப்பரப்பில் கடந்த மூன்று நாட்களாக அடை மழை பெய்து வருகின்றது. இந்த அடை மழையால் பல பகுதிகளில் இடம் பெயர்ந்த பொதுமக்களின் வீடுகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. பெரும் இடர்களைக் கடந்த 15 நாட்களாக இம் மக்கள் எதிர்கொண்டு வருகின்றனர்.

வீடுகள் வெள்ளத்தில் மூழ்கியிருப்பதால் பொதுமக்கள் இடம் பெயர்ந்து பாடசாலைகளுக்கு சென்று தங்கியுள்ளனர். இராமநாதபுரம் குளத்தடியில் வான்நீர் பாய்ந்து கொண்டிருந்த போது 6-2 தொட்டி யடி விசுவமடுவை இடைக்கால முகவரியாக கொண்ட சின்னத்தம்பி பேரம்பலம் (வயது 57) என்பவர் உயிரிழந்துள்ளார்.

கடந்த மாத இறுதியில் நிஷா புயலில் ஏற்பட்டது போன்று வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. நேற்று அதிகாலை 12.00 மணி முதல் அதிகாலை 4.00 மணிவரை மட்டும் 8.02 சென்ரி மீற்றர் மழை வன்னியில் பெய்துள்ளது.

இதேவேளை முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் முதல் கடும் மழை பெய்து வருவதால் யுத்தத்தினால் இடம் பெயர்ந்து கொட்டில்கள், பொது இடங்களில் தங்கியுள்ள மக்கள் பெரும் கஷ்டங்களுக்கும் சிரமங்களுக்கும் ஆளாகியிருப்பதாக முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி எமில்டா சுகுமார் தெரிவித்துள்ளார்.

கடந்த 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு காற்றுடன் பெய்த மழை தொடர்ந்து கடுமையாகப் பெய்து வருவதனால் வீதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன,முல்லைத்தீவு நகரப் பகுதியின் வீதியின் இருமருங்கிலும் உள்ள குடாக்கடலில் நீர்பெருகி வீதி இருக்கும் இடம் தெரியாமல் மூடிக்கிடக்கின்றது.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு வீதியில் பல இடங்களில் வீதியோர ஆழமான வாய்க்காலில் பெருகி வரும் நீர் வீதியை மூடியிருப்பதால், வீதி இருக்கும் இடத்தை அடையாளப் படுத்துவதற்காக மக்கள் கயிறுகளைக் கட்டியிருப்பதாகவும் நீர் நிறைந்துள்ள வீதியில் பழுதடைந்த பகுதிகளில் வாகனங்கள் போக்குவரத்து செய்ய முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஒட்டுசுட்டான் பகுதியில் இருந்து மோசமடைந்த வீதியில் கொட்டும் மழைக்கு மத்தியிலும் மக்கள் இடம் பெயர்ந்து பாதுகாப்பான இடங்களை நாடி சென்று கொண்டிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஒட்டுசுட்டான் வீதி மோசமாகப் பாதிப்படைந்திருப்பதனால் சில இடங்களில் வாகனங்கள் பள்ளங்களில் புதைந்துள்ள நிலையிலும் வீட்டுப் பொருட்களுடன் மக்கள் மிகுந்த கஷ்டத்திற்கு மத்தியில் இடம் பெயர்ந்து செல்கின்றனர்.

வீதிகள் நீரில் மூழ்கியிருப்பதால் இடம் பெயர்ந்து வந்து வீதிகளின் நிலைமை தெரியாத நிலையில் புதிய இடங்களில் தங்கியுள்ள மக்கள் சொந்த பாதுகாப்பை முன்னிட்டு போக்குவரத்துக்கள் செய்ய வேண்டாம் என முல்லைத்தீவு செயலக அதிகாரிகள் எச்சரிக்கை அறிவித்தல் விடுத்துள்ளார்கள். (ச-5)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.12.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.